ISSN 1391-9504




தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆள்பதி நாயகத்தின் அதிருப்தி

அமைச்சர்களின் கோரிக்கையை அன்ட்ருஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒப்பந்தத்தில் இணைந்துகொள்வதற்கு முழுமையான அதிகாரத்தை வழங்கி சென்னைக்கு பிரதிநிதி ஒருவரை அனுப்பும்படி அன்ட்ருஸ் மன்னனுக்கு இறுதியாக ஆலோசனை ஒன்றை வழங்கினார். மன்னன் அதனை ஏற்றுக்கொண்டார். இதன் பின்னர் அன்ட்ருஸ் ஒக்டோபர் மாதம் மீண்டும் திருகோணமலைக்கு வந்தார். அவருடன் மன்னர் சார்பாக, மீகஸ்தென்னை மற்றும் தெனகமுவ 'அதிகாரம்' எனும் பதவியில் உள்ளவர்கள் பிரதிநிதிகளாக இந்தியா நோக்கிப் பயணமானார்கள்.

இதற்கிடையில், கொழும்புக்கு வருவதற்காக படை அணியினர் இராமநாதபுரம் நகரில் ஆயத்தமானார்கள். இந்நிலையில் பிரதிநிதிகள் குழு டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி சென்னையை அடைந்தனர். இவர்களுடன் ஒல்லாந்தருக்கு எதிராக உதவுவதற்கு ஆங்கிலேயர் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதை ஆள்பதி நாயகமாகிய 'வெயின்மின்' பிரபு விரும்பவில்லை. எனினும், ஒல்லாந்தரின் பரம விரோதியான ஹோபாட் பிரபு இவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள விரும்பினார்.

ஆங்கிலேயருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் ஐரோப்பாவில் உள்ள தொடர்புகள் ஒருவிதத்தில் வெளிநாட்டிலுள்ள ஆங்கிலேயர் மற்றும் ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்கிடையில் ஏற்படும் ஒற்றுமை அல்லது பகைமையைப் பொறுத்தது என பேரரசு அவர்களுக்கு விளக்கமளித்தது. ஆங்கிலேயருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே அக்காலகட்டத்தில்கூட சமாதானம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருந்தன. இந்தக் கருத்தை ஆள்பதிநாயகம் முன்வைத்த பொழுதும் பிரதிநிதிகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களின் மன்னர் கி.பி.1776 இல் கையொப்பமிட்ட ஒல்லாந்த ஒப்பந்தம் குறித்தும் அவர்களுக்கு அவ்வளவாக விளக்கம் இல்லை. அக்காலகட்டத்தில் ஒல்லாந்தர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டாலும் இலங்கையில் அவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றே அவர்கள் எண்ணினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களால் வருடமொன்றில் 2,000 உயிரிழப்புக்கள்



## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

இலங்கையில் வருடமொன்றிற்கு சுமார் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள் சம்பவிப்பதாகவும் அந்த விபத்துக்களுக்கு ஆளாகுவோரில் வடமொன்றிற்கு சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழப்பதாகவும் சுகா தார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், வருடமொன்றில் பாரியளவு சேதங்களுடன் கூடிய சுமார் 30 ஆயிரம் விபத்துக்கள் சம்பவிப்பதாகவும் நாளொன்றுக்கு சுமார் 6 பேரளவில் வீதி விபத்துக்களால் உயிரிழப்பதாகவும் வைத்தியசாலை அறிக்கைகளூடாக தெரியவருகின்றது.

இதில் அநேகமான விபத்துக்கள் போக்குவரத்து விதிமுறைகள் முறையாக கடைப்பிடிக்காமையின் காரணமாகவே ஏற்படுவதாகவும் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# ஜனவரி 2 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும்



மூன்றாம் தவணை விடுமுறைக்காக கடந்த 9 ஆம் திகதி மூடப்பட்ட பாடசாலைகள், மீண்டும் முதலாம் தவணைக்காக, 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், க.பொ.த. (சா/தர) பரீட்சை வினாத்தாள் மதிப்பீடு செய்வதற்கென தெரிவுசெய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட சில பாடசாலைகள் மாத்திரம் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய திறக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**அடுத்த ஆண்டு...**

2012 ஆம் ஆண்டின் பாடசாலை கல்வித் தவணையின்படி, ஜனவரி 2ஆம் திகதி திறக்கப்படுகின்ற பாடசாலைகள், பின்னர் ஏப்ரல் 5 ஆம் திகதி முதலாம் தவணை விடுமுறைக்காக மூடப்படும். அவ்வாறே, இரண்டாம் தவணைக்காக மீண்டும் ஏப்ரல் 23 ஆம் திகதி திறக்கப்பட்டு ஓகஸ்ட் 3 ஆம் திகதி விடுமுறைக்காக மூடப்படுவதுடன், மீண்டும் செப்டெம்பர் 3 ஆம் திகதி திறக்கப்பட்டு டிசம்பர் 7 ஆம் திகதி மூன்றாம் தவணை விடுமுறைக்காக மூடப்படும்.

# பாடசாலை அபிவிருத்தித் திட்டம் முன்னெடுப்பு

நாட்டிலுள்ள அபிவிருத்தி செய்யப்படாத பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான



நடவடிக்கைகள் அடுத்த வருடம் மேற்கொள்ளப்பட இருப்பதாக கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன்மூலம் சகல பிரதேசங்களுக்கும் சம அளவிலான கல்வி வாய்ப்பை வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் ஒன்று என்ற அடிப்படையில் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக அவை அபிவிருத்தி செய்யப்படும். இதனூடாக, நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் உள்ள மாணவர்கள் சம அளவிலான கல்வி வாய்ப்புக்கள், வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழி திறக்கப்படுகின்றது. இதனால், நகரப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் மீதான பெற்றோரதும் மாணவர்களதும் ஆர்வத்தைத் தடுக்க முடியும் என்றும் கல்வித்துறை அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## எதிர்வரும் வருடங்களில்

# சா/தரம், உ/தரத்தில் பாரிய மாற்றங்கள்

## கல்வித்துறை அமைச்சர் தெரிவிப்பு

எதிர்வரும் வருடங்களில் கல்வித்துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் பொருட்டு, பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கல்வித்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி, கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர் தர வகுப்புகளிலேயே, இந்த மாற்றங்கள்



ஏற்படுத்தப்படவுள்ளதாக அறியக்கிடைக்கின்றது. அதன்படி, உயர் தரத்தில் தற்போதிருக்கும் கணிதம், விஞ்ஞானம், கலை, வணிகம் ஆகிய நான்கு துறைகளுடன், ஐந்தாவதாக தொழில்நுட்பம் என்றொரு துறையும் புதிதாக உள்ளடக்கப்படவுள்ளதோடு, இதற்கான பாட்விதானமும் உருவாக்கப்படும் என்றும் இதன் அடிப்படையிலேயே பல்கலைக்கழக தெரிவுகள் இடம்பெறும் என்றும் கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். அவ்வாறே, சாதாரண தரத்திலும் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் இவற்றுக்கான புதிய பரீட்சை முறைமைகள் 2013 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்படும் என்றும் கல்வித்துறை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

O/L பரீட்சையின் பின்னர் உங்கள் அடுத்த இலக்கு என்ன ?
2011 ம் ஆண்டு O/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கு-மான விசேட தபால் மூல ஆங்கில பாடநெறி ஆரம்பமாகவுள்ளது.
மேலதிக விபரங்களுக்கு பெயர் முகவரியை
SMS செய்யுங்கள் 0774-348434
or தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள்
JEI INSTITUTE-P.O.Box.119,Kandy

30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773 - 123 523 க்கு SMS செய்யுங்கள்.
10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று Dialog Sim Card ஒன்று Video CD வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எலலா மாவண/மாணவிகளுக்கும். வழங்கப்படும்.
எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் திறமையை வெளிக்காட்டுவதுடன் எதிர்கால உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பபை பெற மற்றும் நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரித உணவின் ஆபத்துகளை உணர்வோம்





இயந்திர வேகத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் இன்றைய மக்கள் எதனை உண்கிறோம்? எப்படி உண்கிறோம்? என்றெல்லாம் சிந்திக்காமல் அவசர அவசரமாக கிடைத்ததை வாயில் அள்ளிப்போட்டுக்கொண்டு ஒடுகின்றனர். வேலைக்குச் செல்பவர்களின் நிலை இப்படியென்றால், பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் நிலையும் இதுதான். இவர்களில் பலர் சத்துள்ள உணவிற்குப் பதில் வெறும் நொறுக்குத் தீனியாக உண்டே பசியைப் போக்கிக் கொள்கிறார்கள். அதுவும் பெக்கட்டுகளில் அடைக்கப்பட்டு வரும் (ச்)சிப்ஸ், மிக்ஷர், போன்றவைகளையே அதிகம் உண்கிறார்கள். அடுத்து பிட்ஸா, பர்கர், பிரெஞ்ச் ப்ரைஸ், உருளைக் கிழங்கு (ச்)சிப்ஸ், போன்றவற்றோடு,மென்பானங்களும் இவர்களின் வயிற்றை நிரப்புகின்றன. இவ்வாறான உணவுகளை உண்பதை பழக்கமாகக் கொண்டவர்கள் தங்களுக்குத் தெரியாமலேயே நோயை விலைகொடுத்து வாங்கிக் கொள்கிறார்கள் என்பதே அதிர்ச்சி கலந்த உண்மையாகும்.

## விரைவில் கெடக்கூடியவை

உடனடி உணவு வகைகள் விரைவில் பழுதடையாமல் இருக்கவும் அதன் சுவையை அதிகரிக்கச் செய்யவும் அமோனியா கலக்கப்படுகின்றது. இது புற்றுநோயை வரவழைக்கக்கூடியது. இதுபோன்ற உணவுப் பொருட்களை ஒரு குறிப்பிட்ட குளிர் நிலையில் மைனஸ் 18° முதல் 22° வரை வைக்க வேண்டும்.ஆனால், அனைத்து சந்தர்ப்பங்களிலும் அத்தகைய குளிர் நிலையில் வைக்க வாய்ப்புகள் கிடைப்பதில்லை. இவ்வாறான உணவுகள் பழுதடையும் சந்தர்ப்பங்களில் நீர்க்குமிழ்கள் தோன்றி உணவுப் பொருள்மீது படிந்து கெட்டித் தன்மையை ஏற்படுத்திவிடுகின்றன.

## நொறுக்குத் தீனியின் பேராபத்துக்கள்



அவசர உணவுகளான பழ (Fruit) ஜெலி மற்றும் நொறுக்குத் தீனிகளில் சேர்கின்ற வண்ணங்கள் (Colouring) நம் உடலுக்குத் தீங்கு விளைவிப்பவை. இந்த வண்ணக் கலவையை ஏற்று சமிபாடடைய வைக்கும் சக்தி நம் குருதிக்குக் கிடையாது. சிறுநீரகமும் இதனை சுத்திகரிக்காது. இத்தகைய, ஒரு நொறுக்குத் தீனிப் பெக்கட்டில் மிகக் குறைந்தளவு ரசாயனமே (100 கிராம்) கலக்கப்படுகின்றது. இதனை உண்ணும் ஒருவர் அந்த சுவைக்கு அடிமையாகிவிட்டால், அதனை அடிக்கடியோ அல்லது அதிகமாகவோ உண்ணும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இதன்மூலம் மிகப் பாதகமான விளைவுகளே அதிகமாகும். இத்தகைய சோடியம் சம்பந்தப்பட்ட உணவுகளை குறிப்பிட்ட சில நோய் உள்ளவர்கள் இவற்றை முற்றாகவே தவிர்க்க வேண்டும்.

## உருளைக்கிழங்கும் வெங்காயமும்

வேக வைத்த உருளைக்கிழங்கையும் வெட்டப்பட்ட வெங்காயத்தையும் சில கடைகளின் தட்டுக்களில் பரப்பி வைத்திருப்பர். இந்த இரண்டிற்கும் காற்றில் உள்ள நுண்கிருமிகளை மிக எளிதில் ஈர்க்கும் அபார குணமுண்டு. பக்கத்தில் ஒருவர் தும்மினால்கூட, அதிலுள்ள கிருமிகளை அப்படியே உருளைக்கிழங்கும் வெங்காயமும் ஈர்த்துவிடும் தன்மையுடையவை.



அனேகமாக, பெரும்பாலான சிற்றுண்டிகளான, பிஸ்கட், பர்கர், பிட்ஸா இவை அனைத்தும் மேலைத்தேய நாகரிகங்களில் இருந்து நாம் உள்வாங்கியவையே. ஆனால், அங்குள்ள வெப்ப நிலைக்கும் கலக்கின்ற பொருட்களுக்கும் இங்கேயுள்ள நமது சுவாத்தியத்திற்கும் கலக்கும் பொருட்களுக்கும் நிறையவே வித்தியாசங்கள் உள்ளன.

## உணவு உண்ணும் விதிமுறைகள்

ஒவ்வொரு உணவும் உரிய முறையில் உண்ணவேண்டும் என்பதே விதிமுறையாக உள்ளது. இதற்கமைய, முழு கோதுமையை அரைத்து உண்பதே உடல் நலத்திற்கு ஆரோக்கியமானது. இல்லாவிட்டால், அது நம் உடலுக்கு சக்தியைக் கொடுக்காமல் சமிபாடடைவதற்காக, நம் உடலில் இருந்து சக்தியை எடுத்துக் கொள்ளும். சீனி போன்றவையும் அத்தகையதே. இவை தவிர, பயிர்ச் செய்கையின்போது, நிலத்திற்கு உரம் போடாமல் வளர்க்கப்படுகின்ற ஓர்கானிக் உணவுகளே ஆரோக்கியத்திற்கு மிகச் சிறப்பானவை.



நாம் ஒருமுறை உண்ணும்போது நமது உணவில் புரதம், கொழுப்பு, சரியான அளவில் இருப்பது கூடிய அளவில் அவதானிக்கப் பட வேண்டும். இத்தகைய பழக்கம் மூலமே உடலை இலகுவாகக் கட்டுப்படுத்தலாம். கலோரி அளவு சரியாகக் கிடைக்கும் உணவுப் பொருட்கள் மற்றும் காய்கறி வகைகளை அதற்கேற்ப சமைத்து உண்டால் நீரிழிவு போன்ற நோய்கள் நம்மை நெருங்காது.

## பாதிப்புக்கள் பலவிதம்

மேற்குறித்த அனைத்தையும் அலட்சியம் செய்து தொடர்ந்தும் நொறுக்குத் தீனியை உண்டால் பல்வேறு பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். ஒவ்வொருவருடைய உடல் அமைப்பு, குடல், இரைப்பை அது சுருங்கி விரியும் தன்மை இவற்றைப் பொறுத்து பாதிப்பின் தீவிரம் இருக்கும். பொதுவாக, சமிபாடடையத் தேவையான பித்தநீர், கணையநீர் குறைந்து காணப்பட்டால் சமிபாடு நிகழாது. இவை எல்லாம் நாம் உண்ணும் உணவைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றன. இவற்றை எல்லாம் அலட்சியப்படுத்தி தவறான உணவுகளை உண்ணும்போதுதான் அஜீரணம், வாய்வுத் தொல்லை, நெஞ்சு எரிச்சல், அல்சர் அதிகபட்சமாக புற்றுநோய்கூட வர வாய்ப்பிருக்கின்றது.

எனவே, இத்தகைய அவசரமான, ஆரோக்கியமற்ற உணவுகளைத் தவிர்த்து ஆரோக்கியம் தரும் நல்ல உணவுவகைகளை தேர்ந்தெடுத்தால் இன்றும் எதிர்காலத்திலும் உங்கள் வாழ்க்கை சிறப்புறும்.

**இரஞ்சித் ஜெயகர்**

# விலங்குகளில் சில விசித்திரங்கள்

விலங்குகள் பற்றிய பல விடயங்களைப் படித்திருப்போம் கேள்விப்பட்டிருப்போம். இங்கு விலங்குகள் பற்றிய சில விசித்திரத் தகவல்களைப் பார்ப்போம்.



* சிறுத்தையால் சிங்கத்தைப் போன்று கர்ஜிக்க முடியாது. பூனையைப் போல் 'மியாவ்' என்ற ஓசையைத்தான் எழுப்பமுடியும்.
* ஓர் ஒட்டகத்தை விடவும் அதிக நாட்களுக்கு நீரின்றி எலியால் உயிர்வாழ முடியும்.
* ஒட்டகப் பறவை என்று நெருப்புக்கோழி அழைக்கப்படுகிறது. இவை ஒட்டகத்தைப் போலவே பல நாட்கள் நீர் அருந்தாமல் வாழக்கூடியவை.
* மரங்கொத்தியால் நொடி ஒன்றுக்கு 20 தடவைகள் மரத்தைக் கொத்த முடியும்.
* காகம் ஒரு மணித்தியாலத்திற்கு 45 மைல்கள் வேகத்தில் பறக்கும்.
* ஒரு சாதாரண பசு அதன் வாழ்நாளில் 2 லட்சம் குவளை பால் கொடுக்கின்றது.
* உலகிலேயே மிகச்சிறிய பாலூட்டி, தாய்லாந்தில் காணப்படும் பம்பல் பீ (Bumblebee bat) என்ற வெளவால் இனமாகும்.
* டொல்ஃபின்கள் ஒரு கண்ணை மட்டும் மூடிக் கொண்டு தூங்கும்.
* நீலத் திமிங்கிலம் எழுப்புகின்ற ஒருவித விசில் ஒலி, விலங்குகள் எழுப்பும் ஒலிகளிலேயே மிகவும் பலமானதாகும். அதன் அளவு 188 டெசிஃபல்கள்.
* வேட்டையாடுவது உள்ளிட்ட முக்கியமான பணிகளை பெண் சிங்கமே செய்கிறது. ஆண் சிங்கம் பொரும்பாலும் ஓய்வெடுப்பதும், குட்டிகளைக் கவனிப்பது போன்ற பணிகளை மட்டுமே செய்கின்றது.
* ஜெலி மீனில் 95 சதவீதம் நீர்தான் உள்ளது.
* பென்குயின்களில் பெண் இனம் முட்டை இடும் பணியைச் செய்கிறது. ஆண் இனம்தான் அடைகாத்துக் குஞ்சு பொரிக்கின்றது.
* மனிதனுக்கு அடுத்தபடியாக சிந்திக்கும் திறன் உள்ள பிராணி சிம்பன்சி குரங்குதான்.
* பிறந்த யானைக்குட்டி 6 மாதங்கள்வரை வெறும் தாய்ப்பால் மட்டுமே குடிக்கிறது. யானைக்கு 4 பற்கள் உள்ளன. இவை சுமார் நூறு தடவைகள் விழுந்து முளைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்

## கல்வி

### முகாமைத்துவம் - 85

### கற்றலுக்கான ஆலோசனைகள்

***பாடசாலைப் பருவம் என்பது, கல்வியை சிறப்பாகக் கற்றுக்கொள்ள ஏற்ற-தகுந்த காலமாகும். அப்பருவத்தைக் கல்விக்காக அர்ப்பணிப்பது எமது எதிர்காலத்திற்கு மிகவும் வரப்பிரசாதமாக அமையும். அவ்வாறான பொன்னான பருவத்தில் நாம் செய்யும் சாதனைகளும் ஆற்றல்களும் மிகவும் வரவேற்கத்தக்கவை***

எனவே, பாடசாலைப் பருவத்தில் மாணவர்கள் தம்மை வெறும் புத்தகப் பூச்சிக்களாகவும் பரீட்சைக் கருவிகளாகவும் உருவாக்கிக்கொள்ளாமல், அனைத்தையும் செய்கின்ற, அனைத்திலும் பங்குகொள்கின்ற நடைமுறைச் செயற்பாட்டாளர்களாக மாணவர்கள் தம்மை உயர்த்திக்கொள்ள வேண்டும்.பாடசாலைக் கல்வியைக் கற்பதோடு, எமது கடமை முடிந்துவிட்டது என தான்தோன்றித்தனமான மனப்பான்மையோடு மாணவர்கள் ஒருபோதும் கல்வியில் ஈடுபடக்கூடாது. மாறாக, கல்வி கற்கும் காலங்களில் பாடசாலைகளிலோ



அல்லது வெளி இடங்களிலோ கலை நிகழ்ச்சிகள், போட்டி நிகழ்ச்சிகள் நடாத்தப்படின், அத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு தமது ஆற்றல்களை வெளிப்படுத்துவது மிகச் சிறப்பானது.

அனேகமாக, எம் ஒவ்வொருவரிடையேயும் பல்வேறு விதமான ஆற்றல்களையும் திறன்களையும் இறைவன் ஏற்படுத்தியிருக்கின்றான். அவை எம்மில் புதையுண்டு இருக்கின்றன. அவற்றை வெளிக்கொண்டுவருவது அவரவர்களால் மட்டுமே முடியும். எனவே, ஒருவரிடமுள்ள திறமைகளையும் ஆற்றல்களையும் வெளியிடக்கூடிய இடம் இவ்வாறான நிகழ்ச்சிகளாகவே இருக்கும். இவையே எமக்கு சிறந்த உயர்களத்தைக் காட்டிக்கொடுக்கின்றன. அதற்கான வாய்ப்பு மாணவப் பருவத்திலேயே நமக்குக் கிடைக்கின்றது.

அத்துடன், இவ்வாறான ஏதாவதொரு நிகழ்ச்சியில் நாம் பங்குபற்றினால்,அவற்றில் வெற்றி, தோல்வி ஏற்படுவது சாதாரணமானது. எனவே, வெற்றிக்குப் பதிலாக தோல்வி ஏற்பட்டால், அதற்காக வருந்துவதும் இனிவரும் காலங்களில் நடாத்தப்படும் நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் இருப்பதும் தவறானது. ஏனெனில், ஆளுமை உள்ள ஒரு மாணவர் தான் அடைந்த தோல்வியையும்






தனது முயற்சிக்கான வித்தாக மாற்றி அமைத்துக்கொள்வார்.

எம்மை வினைத்திறன் சார்ந்த மாணவராக வெளிக்காட்டுவதற்கு கல்விக்கு அடுத்து இவ்வாறான நிகழ்ச்சிகளே கைகொடுக்கின்றன. இந்த நிகழ்ச்சிகளில் பங்குகொள்வதால் வெற்றி-தோல்வி பற்றி கற்றுக்கொள்ள முடிவதோடு, எமது ஆற்றல்களும் வெளிப்பட்டு, காலப்போக்கில் அந்த ஆற்றல்களை விருத்திசெய்வதற்கான வாய்ப்புக்களும் கிடைக்கின்றன.

இதற்கமைய, மாணவர்களாகிய நீங்கள் கல்வியைக் கற்பதோடு, இவ்வாறான நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும் அரிய சந்தர்ப்பங்களைத் தவறவிட்டு விடக் கூடாது. நிகழ்ச்சிகளில் பங்கேற்பதனால், தற்காலத்தில் மட்டுமல்ல; எதிர்காலத்திலும் அதன் பயனை அடையக்கூடியதாக இருக்கும்.

(தொடரும்)

-எம்.ஏ.எஃப்.சப்ரானா

# 2011, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

பாணகமுவ அந்நூர் மத்திய கல்லூரி மாணவனான எஸ்.ராசித், 168 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சாஜஹான்-ரிஸ்வியா தம்பதியரின் புதல்வராவார்.



இரத்தினபுரி பர்குசன் உயர்தரப் பாடசாலை தமிழ்ப்பிரிவு மாணவியான எம்.கவிப்பிரியா, 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மகேஸ்வரன்-சுமதி தம்பதியரின் புதல்வியாவார்.



மருதமுனை அல்-மதீனா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தஸ்னீப் முஹம்மட், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.





பாத்திலா ஜஹான், 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். சம்மாந்துறை தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் இவர், ஜமால்தீன்-உம்மு ஜெமிலா தம்பதியரின் புதல்வியாவார்.



இரத்தினபுரி பர்குசன் உயர்தரப் பாடசாலை தமிழ்ப்பிரிவு மாணவியான ஸ்ரீ சிவதனுசி, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், குகநாதன்-ஜீத் தம்பதியரின் புதல்வியாவார்.



மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலய மாணவர்களான பா.அஜிர்தன் (176 புள்ளிகள்), ம. அனிற்றாஜினி (160 புள்ளிகள்), சி.பிரணவராஜ் (150 புள்ளிகள்), ஜெ.திவேதன் (148 புள்ளிகள்) ஆகியோர் தமது பாடசாலை அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர்.

திஹாரிய அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி மாணவனான அப்துர் ரஹ்மான், 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பாரிஸ்-ஷமீமா பர்வின் தம்பதியரின் புதல்வராவார்.



திஷோ ஷொப்னா, 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மருதமுனை அல்-மதீனா வித்தியாலய மாணவியாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கப்பல் எவ்வாறு கடலில் பயணிக்கின்றது?

ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் தனது ஜீவனோபாயத்தைக் கழித்துக்கொண்டிருந்த மனிதன் வேட்டையாடுவதற்காக ஆற்றைக் கடக்க முற்பட்டான். இவ்வாறான மனித முயற்சிகளே நாளடைவில் கடலைக் கடப்பதற்கும் வழி அமைத்தது. இதன் பிரதிபலனே உலக, நாடுகளைக் கண்டறியவும் வர்த்தகத்தை விஸ்தரித்துக்கொள்வதற்கும் வாய்ப்பாக இருந்தது. ஆதிகாலங்களில் ஆற்றைக் கடப்பதற்கு மரக்குற்றிகளைப் பயன்படுத்திய மனிதன் பின் சிறிது சிறிதாக முன்னேறி படகு, வள்ளம் என ஆரம்பித்து தற்போது சகல வசதிகளுடன் பயணிக்கும் கப்பல்கள் என முன்னேற்றம் கண்டுள்ளான். இன்றளவில் மனிதனது இந்த முன்னேற்றம் உலகின் பாரிய தொழில்நுட்ப முன்னேற்றமாகவே கருதப்படுகின்றது.



## கடலில் மிதக்கும் கப்பல்

கடலில் கப்பல்கள் பயணிக்கும்போது அதன் கீழ்ப் பகுதி ஓரளவு நீரில் அமிழ்ந்திருப்பதை அவதானிக்கலாம். கப்பலின் எடைக்குச் சமமான நீர் இடம்பெயர்வதால், கப்பலின் குறிப்பிட்டளவு அடிப்பாகமானது, இவ்வாறு கடலினுள் அமிழ்ந்திருக்கும். இவ்வாறு நீரில் அமிழ்ந்துள்ள கப்பலின் ஒவ்வொரு பகுதியும் நீரின் அழுத்தத்திற்கு உள்ளாகின்றன. நீரில் இயற்கையாக உள்ள அழுத்தம் காரணமாகவே, கப்பலின் உட்பகுதியின்மீது இந்த அழுத்தம் செலுத்தப்படுகின்றது. கூடவே, கப்பலின் எடையும் நீரை அழுத்துகின்றது. இந்த இரண்டு அழுத்தங்களுக்கும் சமநிலையை ஏற்படுத்தும் வகையிலேயே கப்பல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. செங்குத்தான நிலையில் உள்ள அழுத்தங்களின் சக்தியே, கப்பலின் எடையை சமநிலைக்கு கொண்டு வருகின்றது. இது 'ஆக்கிமிடிஸின்' விதி என கூறப்படுகின்றது.



### கப்பலின் பிரதான பகுதிகள்




## கப்பல் வகைகள்: கப்பல்களின் பயன்பாடுகளுக்கு ஏற்ப பல்வேறு வகைகளில் அமைக்கப்பட்டுள்ளன

வர்த்தகக் கப்பல்கள்
எண்ணெய்க் கப்பல்- பயணக் கப்பல்- சரக்குக் கப்பல்



போர்க்கப்பல்



காலநிலை கணிப்பீட்டுக் கப்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன கற்காலம்

நவீன கற்காலத்தில் (கி.மு.9500) மனிதன் தனது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகவும் தனது பாதுகாப்புக்காகவும் ஆயுதங்களைத் தயாரிக்க ஆரம்பித்தான். அத்துடன், அவன் வேட்டையாடித் தனக்குரிய உணவைப் பெறுவதற்கு இந்த ஆயுத தயாரிப்பு அவனுக்கு மேலும் பலமாக அமைந்தது. இவ்வாறு ஆயுதங்களைத் தயாரித்த மனிதன் மரங்கள் செடிகொடிகளைக் கொண்டு கட்டுமரங்களையும் அமைத்தான். இவ்வாறே, தனது தொழில்நுட்ப பயணத்தைத் தொடர்ந்த மனிதன் தற்போது பாரிய நீர்மூழ்கிக் கப்பல்களில் பயணிக்கும் அளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளான்.

## எகிப்திய படகு



கி.மு.4000 ஆம் ஆண்டுகளில் எகிப்தியரால் நீளமான படகுகள் தயாரிக்கப்பட்டன. மரப்பலகையால் தயாரித்து உட்புறப்பகுதியில் புல் பரப்பப்பட்டு, செடி கொடிகளால் கட்டப்பட்டதுமான உறுதியான படகுகளே அக்காலகட்டத்தில் தயாரிக்கப்பட்டன. இதன்பின் அவர்கள் அந்தப் படகை மேலும் நவீனப்படுத்தி குஃபு எனக் கூறப்படும் அதனைவிட நீளமான படகைத் தயாரித்தனர்.




## கிரேக்கக் கப்பல்



கி.மு. 1200 ஆம் காலப்பகுதிகளில் கிரேக்கர்கள் கடல் சாகச வீரர்களாகவும் கப்பல் தயாரிப்பதில் பிரசித்தி பெற்றவர்களாகவும் திகழ்ந்தனர். அவர்கள், கப்பல்களைத் தயாரிப்பதற்கான முக்கிய நோக்கம் வர்த்தகத்தை விஸ்தரிப்பதற்காகவே ஆகும். அதற்கமைய இவர்களால் தயாரிக்கப்பட்ட கப்பல்கள் அளவில் மிகப் பெரியதாக காணப்பட்டதுடன், அதில் துடுப்புகளும் பாய்மரங்களும் பயன்படுத்தப்பட்டன.

## ரோமக் கப்பல்



ரோமர்களும் கிரேக்கரைப்போன்றே பாரிய கப்பல்களைத் தயாரித்தனர். அவர்களது நோக்கமும் வர்த்தகத்தை விஸ்தரிக்கும் முகமாகவே அமைந்தது. அவற்றில் சமையல் சுவையூட்டி பொருட்கள், மாணிக்கம், பட்டு போன்றவற்றுடன், மிருகங்களும் கொண்டு செல்லப்பட்டன. 180 அடி நீளமும் 45 அடி அகலமும் கொண்ட அந்தக் கப்பல்களில் பொது மக்களும் பயணம் செய்தனர்.

## வைகிங்

ஸ்கேன்டினேவியரான வைகிங் ஒரு கடற்கொள்ளையராவார். 8 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 11 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிகளில் கடலாதிக்கம் செய்த இவர்களின் கப்பல்கள் மிக நீளமானவை. சாதாரணமாக, 80 அடி நீளமும் 17 அடி அகலமும் கொண்ட இக்கப்பல்களின் ஒரு பக்கத்தில் மாத்திரம் 20 அல்லது 30 துடுப்புக்கள் வரை அமைக்கப்பட்டிருந்தன.



## மூன்றடுக்கு துடுப்புக் கப்பல்



கி.மு.4.5 ஆம் நூற்றாண்டுகளில் மத்தியதரைக் கடலை அண்மித்து வாழ்ந்த கிரேக்கர், ரோமர் மற்றும் பாரசீகருமே இத்தகைய கப்பல்களை நிர்மாணித்தனர். இதன் ஒரு பகுதியில் மூன்று துடுப்பு வரிசைகள் வீதம் ஒவ்வொரு பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்தன. பொதுவாக, இத்தகைய கப்பல்களில் 170 துடுப்பு வரிசைகள் காணப்பட்டன.

## சிறிய கப்பல்



சிறிய வகைக் கப்பல்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் பிரசித்திபெற்றிருந்தன. இதனை மீனவர்களே பயன்படுத்தினர். ஓடத்தின் வடிவில் அமைக்கப்பட்டிருந்த இந்த சிறிய கப்பல்களின் மத்தியில் பாய்மரங்களும் அமைக்கப்பட்டிருந்தன.



## உலகின் மிக நீளமான கப்பல்

மொன்டி, நொக்நேவிஸ், ஹெப்பி ஜயன்ட் எனும் பெயர்களால் குறிப்பிடப்படும் எண்ணெய்க் கப்பலே உலகின் மிக நீளமான கப்பலாகும். 458. 45 மீற்றர் நீளம் கொண்ட இக்கப்பலின் வேகம் மணித்தியாலத்திற்கு 30 கிலோ மீற்றர்களாகும்.



## உலகின் பாரிய பயணிகள் கப்பல்

'Oasis of the Seas' எனும் கப்பலே உலகின் பாரிய பயணக் கப்பலாகும். 'சர்வதேச ரோயல் கெரபியன்' நிறுவனத்திற்குச் சொந்தமான இதில் 6,000 பயணிகள் பயணிக்கலாம். மணித்தியாலத்திற்கு 41.9 கிலோ மீற்றர் (22.6 கப்பல் மைல்) வேகத்தில் பயணிக்கக்கூடியது. இக்கப்பல் 361.8 மீற்றர் நீளமும் 47 மீற்றர் அகலமும் கொண்டது.

## உலகின் பெரிய சரக்குக் கப்பல்

'எமா மாஸ்க்' என அழைக்கப்படும் டென்மார்க் நாட்டுக்குச் சொந்தமான கப்பலே உலகின் மிகப் பெரிய சரக்குக் கப்பலாகும். இதுவே இன்றைய உலகின் மிகப்பெரிய கப்பல் என்றும் பெயர் பெற்றுள்ளது. இதில் 14,770 கனரக வாகனங்களை வரிசைப்படுத்தி வைக்கக்கூடியதாக இருக்கும். இது 183 மீற்றர் அகலத்தையும் 1,302 மீற்றர் நீளத்தையும் கொண்டது.

## மீன்பிடிக் கப்பல்







## உலகின் மிகப் பழைய கப்பல்

தற்போதும் சேவையில் ஈடுபடும் உலகின் மிகப் பழைய கப்பலாக, 'எம்.வி.டொலர்ஸ் போஸ்' எனும் கப்பலே கருதப்படுகின்றது. 1914 ஆம் ஆண்டு 'எஸ். எஸ்.மெடினா' என்ற பெயருடன் அமெரிக்காவே இந்தக் கப்பலைத் தயாரித்திருந்தது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது, அத்திலாந்திக் சமுத்திரத்தில் நேரடியாக யுத்தத்தில் ஈடுபட்ட இக்கப்பல் 2010 ஆம் ஆண்டு சிங்கப்பூர் வாசி ஒருவரால் விலைக்கு வாங்கப்பட்டது.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொலிவியா

**அரசு:** பல கட்சிகளைக்கொண்ட ஐக்கிய குடியரசு.
**சுதந்திரம்:** ஸ்பெய்னிடமிருந்து சுதந்திரப் பிரகடனம்- 1825 ஓகஸ்ட் 6; அங்கீகாரம் - 1847 ஜூலை 21; நிகழ்கால அரசியலமைப்பு-2009 பெப்ரவரி 7.
**தேசிய பெயர்:** ரிபப்ளிகா டி பொலிவியா.
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய ஓகஸ்ட் 6.
**ஜனாதிபதி** (2006): ஈவோ மொரால்ஸ்.
**உப ஜனாதிபதி** (2006): அல்வாரோ கார்சியா.

**மொழிகள்:** ஸ்பெனிஷ், குயுச் சுவா, ஐமாரா (அனைத்தும் உத்தியோகபூர்வ மொழிகள்).
**இனக்குழுவினர்கள்:** குயுச்சுவா 30%, மெஸ்டிஸோ 30%, ஐமாரா 25%, வெள்ளையர் 15%.
**சமயங்கள்:** ரோமன் கத்தோலிக்கம் 95%, மெதடிஸ்ட் திருச்சபை 5%.
**எழுத்தறிவு** (2006): 87%.
**இணையத்தளக் குறியீடு:** .bo
**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** +591.
**தேசிய கீதம்**
coronó nuestros votos y anhelos.
Es ya libre, ya libre este suelo,
ya cesó su servil condición.
Al estruendo marcial que ayer
fuera... என ஆரம்பமாகின்றது.

## புவியியல்

பொலிவியா நாட்டின் கிழக்கு எல்லையில் பிரேசில் அமைந்துள்ளது. ஏனைய அயல்நாடுகளாக பேருவும் சிலியும் மேற்கே அமைந்துள்ளன. ஆர்ஜன்டீனாவும் பராகுவேயும் பொலிவியாவின் தெற்கு எல்லையில் அமைந்துள்ளன.







தேசிய இலச்சினை

நாட்டின் மேற்குப் பகுதியில் அந்தீஸ் மலைத்தொடரின் இருபிரிவுகளும் அல்டிபிலானோ மேட்டுநிலமும் அமைந்துள்ளன. தாழ்நிலங்கள், மழைக்காடுகள், புல்வெளிகள் என்பன நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் எங்கும் வியாபித்துள்ளன. உலகிலேயே மிக அதிகமான உயரத்தில் அமைந்துள்ள நீர்ப்பிரதேசமாகிய டிடிகாகா ஏரியின் பெரும்பகுதி பொலிவியா நாட்டிலேயே அமைந்துள்ளது. நாட்டின் மத்திய மற்றும் வடக்கில் இருந்து பல நதிகள் உற்பத்தியாகின்றன. பெனி, டெசக்குவாடெரோ, குயாபோரே, மெட்ரி டியஸ் மற்றும் மமோரே என்பன நாட்டின் முக்கிய நதிகளாகும்.
**மொத்தப்பரப்பு:** 424,164 ச.மைல் (1,098,580 ச.கி.மீற்றர்).
**நிலப்பரப்பு:** 418, 683 ச.மைல் (1,084,389 ச.கி.மீற்றர்)
**நிலப்பிரிவுகள்:** 9 திணைக்களங்கள்.
**நிர்வாகத் தலைநகரம்:** லா பாஸ்.
**ஏனைய பெரிய நகரங்கள்:** சென்டா குருஸ், கொகாபம்பா, எல் அல்டோ, ஒருரோ.
**உயர்மலைச் சிகரம்:** நெவாடோ சஜாமா (6,542 மீற்றர்).
**தாழ்மையம்:** பராகுவே நதி.
**சனத்தொகை** (2010): 9,947,418.
**நாணயம்:** பொலிவியானோ.

## வரலாறு

இன்றைய பொலிவியா ஆரம்பத்தில் பண்டைய இன்கா சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 16 ஆம் நூற்றாண்டில் ஸ்பானியரின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. 1825 ஆம் ஆண்டு பொலிவியா ஸ்பானியரிடமிருந்து சுதந்திரமடைந்தது.





பொலிவியா நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய சைமன் பொலிவர் என்பவரின் நினைவாகவே, இந்நாட்டிற்கு 'பொலிவியா' எனப் பெயரிடப்பட்டது. பொலிவியா லட்சக்கணக்கான சதுர மைல் பிரதேசத்தை தனது மூன்று அயல்நாடுகளிடம் இழந்தது. அதன்படி, பசுபிக் சமுத்திர கரையோரத்தில் தனக்கிருந்த பல்லாயிரக்கணக்கான சதுரமைல் பிரதேசத்தை 1879 முதல் 1884 வரை நடைபெற்ற பசுபிக் யுத்தத்தில் சிலி நாட்டிடம் பறிகொடுத்தது. றப்பர் மரங்களால் நிறைந்த வளம் மிக்க பெரியதொரு மாநிலத்தை பிரேசிலிடம் இழந்தது. 1932 முதல் 1935 வரை நடந்த ச்சாகோ யுத்தத்தில் 100,000 ச.மைலுக்கும் மேற்பட்ட பிரதேசத்தை பராகுவேயிடம் பறிகொடுத்தது.

1965 இல் கியூபா நாட்டிலிருந்து வழிநடத்தப்பட்ட ஒரு கெரில்லா இயக்கம் மேஜர் ஏர்னஸ்டோ சே குவேரா தலைமையில் பொலிவியாவில் புரட்சிகர யுத்தத்தை ஆரம்பித்தது. ஆனால், ஐக்கிய அமெரிக்க ராணுவ ஆலோசனைக்கமைய, பொலிவிய ராணுவம் கெரில்லா இயக்கத்தை முற்றாக அழித்ததோடு, சே குவேரா கைதுசெய்யப்பட்டு, 1967 ஒக்டோபர் 8 ஆம் திகதி கொல்லப்பட்டார். 1982 இல் மக்களாட்சி மலரும் வரை ராணுவ ஆட்சி தொடர்ந்தது. 1993 ஜூனில் இருந்து மக்களாட்சி அமுலுக்கு வந்தது.


தலைநகரின் ஒரு பகுதி


பொலிவிய ஜனாதிபதி மாளிகை


நெவாடோ சஜாமா மலை
சென்.என்ட்ரூஸ் பல்கலைக்கழகம்


டியாஹுவனாகோ இடிபாடுகள்

## காலநிலை

கிழக்குத் தாழ்நிலங்கள் உலர் காலநிலையோடு இதமானதும் அதிக மழைவீழ்ச்சியைக் கொண்டதுமாகக் காணப்படுகின்றன. அந்தீஸ் மலைப் பிரதேசத்தின் உயர்வான பகுதிகள் உட்பட, மேட்டுநிலப் பிரதேசங்களில் கடுங்குளிராகக் காணப்படுவதோடு, அதனை அண்டிய சமவெளிகளும் மலைச்சரிவுகளும் அதிக மழைவீழ்ச்சியைப் பெறுகின்றன. கோடைகாலத்தில் அதிக மழைவீழ்ச்சி காணப்படும்.

## கலாசாரம்

முழு லத்தீன் அமெரிக்காவிலும் மிகவும் புகழ்பெற்ற 'குயுச்சுவா' மற்றும் 'ஐமாரா' கலாசாரங்கள் பொலிவியா நாட்டில் இன்றும் செல்வாக்குச் செலுத்துகின்றன. கொலம்பியன் ஆட்சி, காலனித்துவ ஆட்சி, குடியரசு ஆட்சி போன்ற பல்வேறு ஆட்சிக் காலங்கள் நிலவிய போதும் பொலிவியன் கலாசாரங்கள் உறுதியாக கடைப்பிடிக்கப்பட்டு பல்வேறு வழிகளில் வளர்ச்சி அடைந்துள்ளன.










## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2003): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 600,100; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 1,401,500.
**வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1999): AM 171, FM 73, SW 77.
**தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997): 48. **இணையத்தள வழங்குனர்கள்** (2003): 7,080; இணையத் தளப் பாவனையாளர்கள்: 270,000.

## போக்குவரத்து


**புகையிரதப் பாதைகள்** (2004): மொத்தம் 3,519 கி.மீற்றர். **பெருந் தெருக்கள்:** மொத்தம் 60,282 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து** (2004): 10,000 கி.மீற்றர்.
**துறைகளும் துறைமுகங்களும்:** போர்டோ அகுய்ரே உட்பட, ஆர்ஜன்டீனா, பிரேசில், சிலி மற்றும் பராகுவே ஆகிய நாடுகளுடன் இலவச சேவைகள் உள்ள துறைகளைக் கொண்டுள்ளது. **விமான நிலையங்கள்** (2004): 1,065.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 3%): சோயா அவரை, கோப்பி, கொக்கோ, பருத்தி, கரும்பு, நெல், கிழங்கு வகைகள். **கைத்தொழில்கள்:** கனிப்பொருள் அகழ்வு, பெற்றோலியம், உணவும் பான வகைகளும், கைப்பணிப் பொருட்கள், புடவை. **இயற்கை வளங்கள்:** தகரம், பெற்றோலியம், சில கனிப்பொருட்கள், விலை மதிப்பான மரங்கள், நீர் மின்வலு. **ஏற்றுமதிகள்** (2009): இயற்கை வாயு, சோயா அவரை மற்றும் சோயா உற்பத்திகள், மசகு எண்ணெய், கனிப் பொருட்கள் . **இறக்குமதிகள்** (2009): பிளாஸ்டிக், கடதாசி, தயாரிக்கப்பட்ட உணவு வகைகள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): பிரேசில், ஐக்கிய அமெரிக்கா, வெனிசுவெலா, பேரு, ஆர்ஜன்டீனா, கொலம்பியா, சிலி, சீனா, ஜப்பான்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- த டெத் ரோட் (லொஸ் யுங்காஸ் பாதை)
- டியாஹுவனாகோ இடிபாடுகள்
- உயூனி உப்புப் படிவங்கள்
- க்றிஸ்டோ டி லா கொன்கோர்டியா சிலை
- அபலோபம்பா தேசிய வனம்
- சிலோலி பாலைவனம்


டிடிகாகா ஏரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாசிப்பின் முக்கியத்துவம்



*வாசிப்பு என்பது மனிதனை பூரணத்துவம் அடையச் செய்வதற்கான ஒரு வழிமுறையாகும். இவ்வழிமுறை ஒரு மனிதனிடத்தில் காணப்படாவிட்டால், அவன் ஒரு சிறந்த மனிதனாக இருக்க முடியாது. வாசிப்பதன் முக்கிய நோக்கமாகக் கருதப்படுவது, அறிவை விருத்தி செய்வது மட்டுமன்றி, முக்கியமான தகவல்களை மூளையில் பதியவைத்து அதனை தேவைக்கேற்றவாறு பயன்படுத்திக் கொள்வதாகும். நமக்கு உகந்த நேரத்தில் தேவையான விடயங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் பிறருக்கு கற்றுக் கொடுப்பதற்கும் வாசிப்புப் பெரிதும் துணை புரிகின்றது.*

நாளாந்தம் ஒருவர் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, விரும்பி வாசிப்பாராயின், அவர் புதிய தகவல்களை அறிந்தவராக விளங்குகின்றார். கவிஞர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் மற்றும் சமயத் தலைவர்களிடம் இருந்தும் பல்லாயிரம் ஆண்டுகளாக, மனித இனம் கண்ட கனவுகளையும் கொண்ட துயரங்களையும் வாழ்ந்த வாழ்க்கையையும் அவர்களின் வெற்றிகளையும் தோல்விகளையும்கூட அறிந்து கொள்ளலாம். மேலும், நாட்டு நடப்புகள் பற்றியும் விரிவாகத் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன், பணிவு, ஒழுக்கம், அடக்கம் புதிய அனுபவங்கள், புதிய சிந்தனைகள் போன்றவையும் ஏற்படுகின்றன. கம்பர், பாரதி, ஔவையார், வள்ளுவர் போன்ற புலவர்களின் அறநெறி வழி நடக்க வாசிப்பு முக்கியமானதாகும். இதனால்தான் வள்ளுவர்,





"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" என்று மொழிந்துள்ளார்

இக்குறளில் கற்றவர்கள் அனைவரும் கண்ணுடையவர்கள் என்றும் கல்லாதவர்கள் முகத்தில் கண் இருந்தும் புண்ணுடையவர்களே என்றும் வள்ளுவர் மிக அழகாக கற்றவரின் சிறப்பைக் கூறியுள்ளார். இங்கு கற்றவர்கள் நல்ல நூல்களை, பத்திரிகைகளை வாசித்து அதன்படி, நடப்பவர்களாவர். இதிலிருந்து வாசிப்பின் முக்கியத்துவம் வெளிப்படையாக எடுத்துக்காட்டப்படுகின்றது.எனினும், எத்தனையோ பேர் தற்போதும் வாசிப்பு அறிவு இல்லாமலேயே இருக்கின்றனர். இன்று சில சமூகத்திடம் சிறந்த தலைமைத்துவம் இல்லாமல் இருக்கின்றது. தலைமைத்துவம் சிறப்பாக அமைய வேண்டுமானால், நேரிய சிந்தனையும் வாசிப்பும் அவசியமாகும். இத்தகைய வாசிப்பின்மூலமே புதிய அனுபவங்கள் ஏற்படுகின்றன. புதிய அனுபவங்களே சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்கித் தருகின்றன. இதனையே வள்ளுவர்

"விலங்கொடு மக்கள் அனையார் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனையவர்"

என்று கூறுகிறார். இக்குறளில் வள்ளுவர், மிருகங்களுடன் மக்கள் சேர மாட்டார்கள். அவ்வாறே, நல்ல நூல்களைக் கற்றவர்களுடன் அல்லது வாசித்தறிந்தவர்களுடன் கற்காதவர்கள் அல்லது வாசித்தறியாதவர்கள் சேரமாட்டார்கள் என்பதை மிக அழகாகக் கூறுகின்றார். வாசிப்பைப் பழக்கிக் கொள்வதற்காக, தினந்தோறும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நல்ல நூல்கள் மற்றும் இலக்கியங்களை வாசித்தல் முக்கியமானதாகும். வாசிப்பில் அக்கறை, என்பது மிகச் சிறப்பானதாகும். எனவே, வாசிப்பதன்மூலம் எம்மை புதுப்பித்து நாம் புதிய மனிதராக மாற வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆகவே, வாசிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

அஹமட் அஸ்ஸியாம்,
பொத்துவில்.



அற்லஸ் வாங்குவோம்!
பரிசுகள் பெறுவோம்!

ரூபா. 50,000 வீதம்
25 பணப் பரிசுகள்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு ரூபா. 500 பெறுமதியான பொதிகளுக்கும் ஒவ்வொரு கூப்பன்களை விற்பனையாளரிடம் பெற்றுக் கொண்டு இன்றே நீங்களும் போட்டியில் பங்கு கொள்ளுங்கள்.

ரூபா. 500 வீதம் அற்லஸ் பரிசுப் பொதிகள் 1000

விரையுங்கள்! 2012 ஜனவரி 10ம் திகதிக்கு முன் உங்கள் கூப்பன்களை அதிகமதிகமாக நிரப்பி எங்களுக்கு அனுப்புங்கள்.

அற்லஸ் அதிர்ஷ்ட விற்பனையாளர்கள் 25 பேருக்கு ரூபா. 15,000 வீதம் பரிசுக் கூப்பன்கள் வழங்கப்படும்



CN CARTOON NETWORK
TM & © Cartoon Network (s12)

WP/GT/3378

விதிமுறை

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். கூப்பன்களை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர். வெற்றியாளர்களின் பெயர்கள் பிரதான பத்திரிகைகளில் வெளியாவதுடன் வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட முறையிலும் அறிவிக்கப்படும்.

www.atlas.lk

Atlas tools for success

0773 878 789

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - I (கடந்த வாரத் தொடர்ச்சி)


பெயர்: ..................................................... நேரம்: 45 நிமிடங்கள்

★ *27 முதல் 29 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்ட தகவல்களின்மூலம் சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.*

 = 3 மாணவர்களைக் குறிக்கும்

 = 4 மாணவர்களைக் குறிக்கும்

 = 2 மாணவர்களைக் குறிக்கும்



27) ஆகக் கூடுதலான மாணவர் தொகையைக் குறிக்கும் உருவம் எது?



28) மொத்த மாணவர் தொகை யாது?

1. 19 2. 20 3. 18

29) 8 மாணவர் தொகையைக் காட்டும் உருவம் எது?




★ *30 முதல் 31 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்ட குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையின்கீழ்க் கோடிடுக.*

30) மகரதம் என்பது ✳◈⊙△✹ எனும் குறியீட்டால் எழுதப்பட்டால், கம்பீரம் என்பதைக் குறிக்கும் சரியான குறியீடு எது?

1. ✳⊙▣◈✹ 2. ◈✹○⊙✹ 3. ◈✹⊙⊙✹

31) | 9 ✳ 3 = △ | △ + △ = 6 | இங்கு ✳ இக்குறியீடு குறிப்பது;

1. + 2. x 3. ÷

32) 

இரண்டு பக்கங்கள் திறந்த நிலையில் உள்ள சதுரப்பக்க வடிவான பெட்டி ஒன்றில் தரப்பட்டுள்ளவாறு இலக்கங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இப்பெட்டியைக் கீழே காட்டப்பட்டுள்ளவாறு திருப்பினால், 5 என்ற இலக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் இருக்கும் இலக்கம் எது?

1. 3 2. 6 3. 4

33) சதுர வடிவான கடதாசி ஒன்றை முக்கோணவடிவமாக இரண்டாக மடித்து படத்தில் காட்டப்பட்டவாறு வெட்டினால் தோன்றும் உருவம் யாது?




34) 



இங்கு காணப்படும் உறவுமுறைக் கோட்டுப் படத்தில் குமாரின் மாமாவின் பெயர் என்ன?

1. விமல் 2. தினேஸ் 3. ரவி





35)  இங்கு காணப்படும் முக்கோணங்களின் எண்ணிக்கையை எழுதுக

(........................)

36)  1m=5cm ஆயின், A யில் இருந்து E வரையிலான தூரத்தை cm இல் எழுதுக.

(........................)

★ *37 முதல் 38 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்ட குறியீடுகளையும் இலக்கங்களையும் பயன்படுத்தி விடை எழுதுக.*



37) கூடுதலாகக் காணப்படும் இலக்கம் எது?

(........................)

38) குறைவாகக் காணப்படும் குறியீடு எது?

(........................)

39) | யு | கு | ம் | | ம | ரி | ய | | உ | ழை | ன் | | பெ | தி | ய் |


இங்கு தரப்பட்டுள்ள எழுத்துக்களில் இருந்து ஆறு எழுத்துக்களைக்கொண்ட இரண்டு சொற்களுடன்கூடிய எதிர்கால இயற்கை நிகழ்வை ஆக்கி எழுதுக.

(..........................................)

40)  இங்குள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை இலக்கங்களின் எண்ணிக்கைகளைவிடக் குறைவாயின், 'வ' என்ற எழுத்தின் மீது '✓' இடுக. அவ்வாறு இல்லை எனின், வட்டமிடப்பட்ட 4 என்ற இலக்கத்தின் மீது '×' இடுக.

### வினாத்தாள் - I இற்கான விடைகள்

*(டிசம்பர் 7,14 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | |
|---|---|---|---|
| 01) 1 (படத்தொகுதி B) | 10) 2 | 21) 3 | 32) 3 |
| 02) 3 (படத்தொகுதி C) | 11) 2 | 22) 8 | 33) 3 |
| 03) 2 | 12) 2 | 23) 48 | 34) 3 |
| 04) 3 | 13) 1 | 24) 1 | 35) 20 |
| 05) 2 | 14) 2 | 25) 1 | 36) 110cm |
| 06) , - | 15) 1 | 26) 2 | 37) 4 |
| 07)  | 16) 1 | 27) 2 | 38) * |
| | 17) 2 | 28) 1 | 39) மழை பெய்யும் |
| | 18) 1 | 29) 3 | 40) வ  |
| 08) 3 | 19) 2 | 30) 2 | |
| 09) 3 | 20) 1 | 31) 3 | |

## கப்பல் கொடிகள்



ஒரு கப்பல் எந்த நாட்டுக்குச் சொந்தமானதாக இருக்கின்றதோ, அந்த நாட்டின் கொடியே அந்தக் கப்பலின் பின்பக்கக் கொடிமரத்தில் ஏற்றப்பட்டிருக்கும். அவ்வாறே, குறித்த கப்பல் பயணத்தின்போது, முதலில் அது எந்த நாட்டுக்குச் செல்கிறதோ, அந்த நாட்டின் கொடியே கப்பலின் முன்பக்கத்திலுள்ள முதலாவது கொடிமரத்தில் ஏற்றப்பட்டிருக்கும். அத்துடன், கப்பல் யாருக்குச் சொந்தம் என்பதைக் காட்டுவதற்காக, கப்பலின் நடுவில் அதன் உரிமையாளரின் கொடி பறக்கும். இது தவிர, கப்பலின் புகை போக்கியில் வரையப்படும் அடை யாளக் குறியீடுகளும் அந்தக் கப்பல் யாருக்குச் சொந்தம் என்பதைக் காட்டும்.



## இயற்கையின் அதிசயம்!




தென்னாபிரிக்கப் பாலை வனங்களில் 'ஸாகுவாரோ' என்ற கள்ளிச்செடிகள் அதிக அளவில் காணப்படுகின் றன. நன்கு வளர்ச்சிபெற்ற இச்செடியொன்றில் சுமார் 10 டொன் எடைக்கு நீர் போன்ற ஒரு திரவம் இயற்கையாகச் சுரந்து சேமித்து வைக்கப்படுகி றது. அத்துடன், வருடத் துக்கு 3 லட்சம் விதை களை இச்செடி உற்பத்தி செய்தாலும், அவற்றில் ஒன்றுதான் செடியாக முளைக்கிறது என்பதெல்லாம் இயற்கை யின் அதிசயமே!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்க்கிருமிகளில் இருந்



குறிப்பிட்ட சில பருவகாலங்களில் சிற்சில நோய்களால் மக்கள் பாதிக்கப்படுவது அதிகரித்துக் காணப்படும். நீர் மற்றும் உணவுகளால் பரவும் நோய்கள் இவற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அந்தவகையில், அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதும் மருத்துவ உலகில் அதிக கவனத்தை ஈர்த்துள்ளதுமான ஒரு நோய்தான் 'வயிற்றுளைவு' ஆகும். இது நோய்க் கிருமிகளின் தாக்கத்தினால் ஏற்படுகின்ற குடல் சம்பந்தப்பட்ட ஓர் உயிர்கொல்லி நோயாகவும் கருதப்படுகிறது. இதுபோன்றே, நோய்க்கிருமிகள் நம் மத்தியில் ஏராளமான நோய்களைப் பரப்பக்கூடியதாக இருக்கின்றன. எனவே, நாம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்




## கிருமித் தொற்றுக்கு இலக்காகும் விதம்

பொதுவாகப் பார்க்கும்பொழுது எமது கைகள் சுத்தமாக இருப்பது போலவே காட்சியளிக்கும். எனினும், பாடசாலைக்கு வந்து போகும் பொழுது நாம் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் நடைபாதைகளிலும் பாடசாலையிலும் நிகழும் ஒவ்வொரு சம்பவத்தின்மூலமும் எமது கைகளில் கிருமிகள் தொற்றிக்கொள்கின்றன. பாடசாலையைப் பொறுத்தவரையில், சக மாணவர்களின் கைகளூடாகவும் புத்தகங் களூடாகவும் வகுப்பறை தளபாடங்களூடாகவும் மலசலகூடத்தைப் பயன்படுத்துவதனாலும் நோய்க்கிருமிகள் நம்மைத் தொற்றிக்கொள் வதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

இந்த நோய்க்கிருமிகள் தொற்றுவதானது, பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்தான் என்று கருதுவதாகாது. பொதுவாக, நாம் அனைவரும் வீட்டில் அல்லது வெளியிடங்களில் கிருமித் தொற்றுக்களுக்கு இலக்காவதுண்டு. இதன்போது, எமது கைகள் மூலமும் வேறு பலரின் அசுத்தச் செயற்பாடு களாலும் நோய்க்கிருமிகள் நம் உடலினுள் செல்லும் வாய்ப்புக்கள் அதிகம். இதனால், வயிற்றோட்டம், நியூமோனியா, கொலரா மற்றும் ஒவ்வாமை போன்ற நோய்களுக்கு நாம் ஆளாகலாம். ஆக, நோய்க்கிருமி கள் பரவுவதற்கு எமது அசுத்தத் தன்மையே மிக முக்கிய காரணமாகும். எனவே, நாம் அனைவரும் சுத்தமான வழிமுறைகளைப் பின்பற்றுவதனூ டாக, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழலாம்.

## நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்கள்

நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் நம் உடலில் உட்புகா வண்ணம் பாதுகாக்க வேண்டுமாயின், நாம் நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கமைய, சுத்தமான நீரை எமது தேவைகளுக்குப் பயன்படுத்தல், சூழலை சுத்தமாக வைத்திருத்தல், சூழல் சமநிலையைப் பேணல், உடற்சுத்தத்தைப் பேணல் போன்ற விடயங்களில் நாம் அதிக கவனத்தை செலுத்த வேண்டும்.

## கிணற்றிலிருந்து நீரைப் பெறும்போது.....

கிணற்றிலிருந்து நீரைப் பெறுவதாயின், அந்நீர் தூய்மையானதாக இருக் கும் வகையில் பாதுகாக்கப்பட வேண்டும். கிணற்றிலிருந்து நீரை அள்ளு வதற்கென்றே, பிரத்தியேகமான ஒரு வாளியைப் பயன்படுத்த வேண்டும். நீரை அள்ளிய பின் வாளியை உயரமான, சுத்தமான இடத்தில் வைக்க வேண்டும். கிணற்றுக்கும் மலசலகூடத்திற்கும் இடையில் கணிசமான அளவு தூரம் இருக்க வேண்டும். அத்தோடு, வீட்டில் நீரை சேமித்து வைக் கும் பாத்திரங்கள், குடங்கள் போன்றவையும் மிகச் சுத்தமாக இருக்க வேண் டும். நீரை ஊற்றி வைப்பதற்கு முன்னர் அப்பாத்திரங்களை தினமும் நன்றாகச் சுத்தமாக கழுவ வேண்டும். அத்துடன், பல்வேறு ஜந்துக் கள் நீரைச் சேமித்து வைத்திருக்கும் பாத்திரங்களை நாடி வருவது அதிகம் என்பதால் நீரைச் சேமித்து வைக்கும் பாத்திரங்களை எந்நேரமும் மூடி வைத்திருக்க வேண்டும்.

ஏரி அல்லது ஆறுகளுக்கு அருகில் உள்ள கிணறுகளில் நீரைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அவற்றின் தூய தன்மை குறித்து நன்கு பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறே, குழாய்க் கிணறு களின் நீரைப் பயன்படுத்தும்போதும் அந்த நீரின் தூய தன்மை கு[illegible] அதிக கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய குழாய்க் கிணறுகள் தேவை யான அளவு ஆழத்தில் உள்ளதா? என்பது குறித்தும் நாம் அதிக அக்கறை செலுத்துவது நமது ஆரோக்கியத்தைப் பேணப் பெரிதும் உதவும். அத்து டன், எப்போதும் கொதித்தாறிய நீரைப் பருகுவது உடற்சுகாதாரத்திற்கு மிகவும் உகந்தது.

## கைகளைக் கழுவுதல்

சவர்க்காரத்தைப் பயன்படுத்தி கைகளின் அனைத்துப் பகுதிகளிலும் குறிப்பாக; விரல்கள், விரல் இடுக்குகள், உள்ளிட்ட கைகளின் மணிக்கட்டுப் பிரதேசத்தை சூழவுள்ள பகுதிவரை நன்றாக-சுத்தமாக கழுவ வேண்டும். அந்தவகையில் உணவு தயாரிப்பதற்கு முன்னரும் உணவு பரிமாறுவதற்கு முன்னரும் உணவு உட்கொள்வதற்கு முன்பும் உணவு உட்கொண்ட பின்ன ரும் பிள்ளைகளுக்கு உணவு ஊட்டும் முன்னும் என கைகளை நன்றாகக் கழுவ நாம் மறந்துவிடக்கூடாது. அத்தோடு, மலசல கூடத்திற்குச் சென்றுவந்த பின்பும் கைகளையும் கால்களை யும் சவர்க்காரமிட்டு நன்கு கழுவிக்கொள்ள வேண்டும்.

## உணவு உட்கொள்ளல்


இயன்றளவு வீட்டில் சமைத்த உணவுகளையே உண்ணுங்கள். அந்த உணவு சுத்தமாகவும் முறை யாகத் தயாரிக்கப்பட்ட உணவாகவும் இருத் தல் அவசியம். அத்தோடு; இலையான், கரப்பான், பல்லி போன்றவற்றிலிருந்து உணவைப் பாதுகாப்பதும் அவசி யமாகும்.

- காய்கறிகள், கிழங்கு வகைகளை சுத்தமான நீரில் நன்றாகக் கழுவிய பின்னரே, சமைக்க வேண்டும். பழவகை களை உண்ணும்



இயன்றளவுக்கு வீட்டில் சமைக்கப்பட்ட உணவையே உண்ணுங்கள்.

## மஞ்சள் காமாலை நோய்



இந்நோய் ஏற்பட்டதும் வைரஸ் காரணமாக ஈரல் வீக்கமடையும்.



குழாயில் நீர் அருந்தும்போது, நீர் வரும் குழாய் சுத்தமாக இருக்கின்றதா? எனப் பார்ப்பது மிக முக்கியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந்து விலகி ஆரோக்கியமாக வாழ்வோம்



உங்கள் வீட்டில் உணவுப்பொருட்கள், பாத்திரங்களுக்கருகில் உயிரினங்கள் வருவதைத் தவிர்க்கவும்.



கைகளைச் சவர்க்காரமிட்டு சுத்தப்படுத்துங்கள்.



காய்கறிகள், பழவகைகள், கிழங்குவகைகளை சுத்தமான நீரில் நன்றாகக் கழுவிய பின் உணவுக்காகப் பயன்படுத்துங்கள்.

**அழுக்கடையும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் கைகளைக் கழுவுவோம்**

* பொது வாகனத்தில் அல்லது பஸ்ஸில் பயணித்த பின்.
* தும்மல் ஏற்பட்டபின், தடிமன் ஏற்பட்டிருக்கும்போது மூக்கைச் சீறிய பின்.
* விளையாடி முடிந்த பின்னர்.
* மிருகங்களைத் தொட்ட பின்னர்.

பொ[...] முடிந்தால் அவற்றின் வெளித்தோலை நீக்குங்கள். அத்துடன், பழங்களை நன்கு கழுவிய பின்னர் உட்கொள்ளுங்கள்.

✦ நடைபாதையில் விற்கப்படும் வெட்டிய பழவகைகள், ஐஸ்பெக்கட்டுகள், ஐஸ்கிறீம், குவளையில் ஊற்றி வைக்கப்பட்டுள்ள மென்பானங்கள் போன்றவற்றை உண்ணவோ, அருந்தவோ வேண்டாம்.

✦ இலையான்கள் காணப்படும் உணவுகளைத் தவிருங்கள். இவை மிகக் கொடிய நோய்க்காவியாகும். குப்பை கூளங்களை முறையாக அகற்றி சுத்தமான சூழல் ஒன்றை உருவாக்குவதன்மூலம் இலையான்கள் பெருகுவதைத் தடுக்கலாம்.

## மலசலகூட பயன்பாடு

வயிற்றோட்டம், வாந்திபேதி போன்ற நோய்கள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு விரைவாகப் பரவுவதற்கான முக்கிய காரணம், நாம் அருந்துகின்ற-உட்கொள்கின்ற நீர் அல்லது உணவுடன் நோயாளியின் மலம் கலந்து, நோயற்ற ஒருவரின் உடலுக்குள் செல்வதே ஆகும். எனவே, அத்தகைய நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்க வேண்டுமாயின், மலசலகூடத்தை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

## கிருமிகள் உடலில் உட்புகுவதால் ஏற்படும் நோய்கள்

✦ **மஞ்சள் காமாலை:** இந்நோயானது, குழந்தைகளுக்கு மிக விரைவில் தொற்றக்கூடியதாகும். வைரஸ் கிருமிகளால் ஏற்படக்கூடிய இந்த நோயின் தாக்கத்தினால் ஈரல் வீக்கமடைகின்றது. ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மிக விரைவாகத் தொற்றக்கூடிய இந்த நோய், ஹெபடைடிஸ் வைரஸ் வகைகளில் ஒன்றினாலேயே ஏற்படுகின்றது.

இதன் அறிகுறிகளாக கடுமையான காய்ச்சல், உணவில் விருப்பமின்மை, உடல் முழுவதிலும் ஏற்படும் அதிக வேதனை, வயிற்றோட்டம், வாந்தி, உடல் மஞ்சள் நிறமாதல் என்பன காணப்படுகின்றன.

✦ **வயிற்றோட்டம்:** பக்றீரியா, வைரஸ், ஒரணு நுண்கிருமிகள் மற்றும் சிலவகை முக்கிய நோய்க்கிருமிகள் என்பன இந்நோய் ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கின்றன. நோய்க்காவிகளின் வாய்மூலமாக, இந்தக் கிருமிகள் ஆரோக்கியமான ஒருவரின் உடலுக்குள் செல்வதனூடாக, வயிற்றோட்டம் ஏற்படுகின்றது. இதன்போது, வழமைக்கு மாறாக அதிகளவு மலம் நீர்த்தன்மையுடன் வெளியேறுகின்றது.



வயிற்றோட்டம் காரணமாக, மந்தபோஷாக்கு, உணவில் விருப்பமின்மை, குறைந்தளவான உணவை உட்கொள்தல் போன்ற அறிகுறிகள் நோயாளியிடம் அவதானிக்கலாம். இதன்போது, அவரின் உடல் மிகவும் பலவீனமடைந்து காணப்படும். உடலில் நீர்த்தன்மை குறைவதால் நோயாளி மரணத்தைத் தழுவவும் நேரிடும். அதனால், இத்தகைய நோய் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியரிடம் சென்று உரிய சிகிச்சை பெற வேண்டும்.

✦ **மலத்துடன் குருதி வெளியேறுதல்:** வயிற்றோட்டம் கட்டுப்படுத்த முடியாத பட்சத்தில் மலத்துடன் குருதியும் வெளியேறும். அவ்வாறான நிலை ஏற்படின், அது மிகவும் ஆபத்தானதாகும். இதன்போது, தீவிர மருத்துவ சிகிச்சை அவசியமாகிறது. இதுவும் பக்றீரியா உடலில் நுழைவதால் ஏற்படும் ஒரு நோயாகும். இந்நோயின் அறிகுறிகளாக, வயிற்றோட்டம் ஏற்படுவதோடு காய்ச்சல், உடல் வலி, வாந்தி, மூச்சு விடுவதில் சிரமம், மலத்துடன் குருதி வெளியேறுதல் என்பன காணப்படுகின்றன.

அசுத்தமான நீர், உணவு என்பனவற்றால் இந்நோய் ஏற்படலாம். பொதுவாக, ஏனைய நோய்களில் இருந்து மாறுபட்டதொரு தன்மையை இந்த நோய் கொண்டுள்ளது. அதாவது, இந்த நோயை ஏற்படுத்த மிகச் சிறிய தொகையான பக்றீரியாக்களே போதுமானதாகும்.

✦ **கொலரா:** வயிறு சம்பந்தப்பட்ட ஏனைய நோய்களைப் போன்றே கொலராவும் நோய்க் கிருமிகள் அடங்கிய நீர் அல்லது உணவை உட்கொள்வதால் ஏற்படுகின்றது. 'விப்ரியோ கொலரா' என அழைக்கப்படும் பக்றீரியாக் கிருமிகளாலேயே இந்த நோய் ஏற்படுகின்றது. வயிற்றோட்டமும் வாந்தியும் இதன் பிரதான அறிகுறிகளாகும். கொலரா நோய்த் தாக்கத்திற்கு உள்ளானவர் உடனடியாக மருத்துவரை நாடி உரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**இரஞ்சித் ஜெயகர்**



வயிற்றோட்ட நோயை ஏற்படுத்தும் வைரஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு நிறுவனங்கள்

(தொடர்ச்சி...)

- சர்வதேச வளர்ச்சி வங்கி - I.B.R.D
- உலக வானிலை ஆய்வு நிறுவனம் - W.M.O
- உலக வணிக அமைப்பு - W.T.O
- சர்வதேச விமானப் போக்குவரத்து நிறுவனம் - I.C.A.O
- சர்வதேச தபால் கழகம் - U.P.U
- சர்வதேச விவசாய அபிவிருத்தி அமைப்பு - I.F.A.D
- சர்வதேச கடல் நிறுவனம் - I.M.O
- விவசாய மேம்பாட்டுக்கான சர்வதேச உதவி - I.F.D.A
- ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நல அமைப்பு - UNICEF
- ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டம் - U.N.D.B
- ஐக்கிய நாடுகள் மக்கள் தொகைச் செயற்பாட்டு நிதி அமைப்பு - U.N.F.P.A
- ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவனம் - U.N.I.D.O
- ஐக்கிய நாடுகள் மறு வாழ்வளிப்புப் பணியகம் - U.N.R.W.A
- ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணைக்குழு - U.N.H.C.R

கேதீஸ். கஜவரதன், கறுக்காய் தீவு, பூநகரி.



## நல்ல பிள்ளை

கமல் காலையில் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த போது, வழியில் ஒரு பாட்டியைக் கண்டான். அந்தப் பாட்டிக்குக் கண் தெரியாது. அவர் பாதையைக் கடப்பதற்கு ஒரு தடியை வைத்துக்கொண்டு தடுமாறிக்கொண்டிருந்தார். அந்த வழியே சென்று கொண்டிருந்த யாருமே வயதான அந்தப் பாட்டியைப் பொருட்படுத்தவில்லை. இதனை அவதானித்த கமல் பாட்டி இருந்த இடத்தை நோக்கி விரைந்தான்.

"பாட்டி, பாட்டி நான் வீதியின் மறு பக்கத்திற்கு உங்களை அழைத்துச் செல்கிறேன்" என பாட்டியின் கையைப் பற்றிப் பிடித்துக்கொண்டான். பாட்டியும் மிக உற்சாகமாக சிறுவனின் கையைப் பிடித்தவண்ணம் வீதியை கடந்து சென்றார். "நன்றி மகனே, நீ நல்லாயிருக்கணும்" என பாட்டி வாழ்த்தினார்.

கமல் பாட்டியிடம், "பாட்டி நீங்கள் ஏதேனும் சாப்பிட்டீர்களா?" எனக் கேட்டான். "யாராவது, ஏதாவது தந்தால்தான் சாப்பிடவேண்டும்" என்று பெருமூச்சு விட்டார் பாட்டி. அவன் தன்னிடமுள்ள உணவுப் பொட்டலத்தை பாட்டியிடம் கொடுத்துவிட்டு, பாடசாலையை அடைந்தான்.

அன்று இடைவேளையின் போது, அவன் உணவு உண்ணாமல் இருப்பதைப் பார்த்த வகுப்பாசிரியர் அவனை விசாரித்தார். கமல் கூறியதைக் கேட்ட ஆசிரியர் ஏனைய மாணவர்கள் முன்னால் அவனைப் பாராட்டினார். கமலுக்கு ஆனந்தமாக இருந்தது. வீடு செல்லும்வரை அவனுக்குப் பசிக்கவில்லை.




சியாமா ரபீக்,
மடிகே மிதியால மு.ம.க.,
பண்டார கொஸ்வத்த.

## கடிகாரப் பூக்கள்






பல பூக்கள் சரியான நேரத்தைக் காட்டுவது போன்று பூக்கின்றன. இவற்றில்

- 'மோர்னிங் க்ளோரி' என்ற பூ தினமும் மிகத் துல்லியமாக காலை சரியாக 6 மணிக்குப் பூக்கின்றது.
- 'டெய்சி பூக்கள்' தினமும் காலை 8 மணிக்குப் பூக்கின்றன.
- 'ட்யூலிப் பூக்கள்' நண்பகல் 11 மணிக்குப் பூக்கின்றன.

பாத்திமா ஃபகூஹா, அக்குறனை மு.பா.ம.வித்., அக்குறனை.



## கல்வி

ஆண்டவனை துதிப்போம்
ஆசானை மதிப்போம்
அழியாக் கல்வியினை
அமுதமெனக் கற்போம்!

அகதியாய் ஆயினும்
அரவணைக்கும் கல்வி
கல்வியே கருந்தனமென்பர்
கருதியே கற்றிடுவோம்!

அறநெறி பேணி
அறிவைப் பெருக்குவோம்
பண்புப் பூக்களை
பாரினிலே தூவுவோம்!

ஸனீஹா ஷரீப்,
மதீனா தேசிய பாடசாலை,
சியம்பலாகஸ்கொடுவ.

## முதலைகள்



முதலைகளால் நிலத்தின்மீது சுலபமாக நகர்ந்து செல்ல முடியாது. அதனால்தான் அவை கூடியளவு நேரம் நீருக்குள்ளேயே இருக்கின்றன. பொதுவாக, முதலைகள் நீந்தும்போது, அனைத்துத் திசைகளையும் பார்த்தபடியே நீந்துகின்றன. மிகப்பெரிய பற்களைக்கொண்ட முதலை இனத்தில் பன்னிரெண்டு வகைகள் உள்ளன. இவற்றில் மனிதர்களை உண்ணும் முதலைகள் இந்தியாவில் காணப்படுகின்றன.



இவற்றின் நீளம் 6 மீற்றர். முட்டையிடும் நேரத்தில் மிக ஆக்ரோஷமாகக் காணப்படும் இவை ஒரே நேரத்தில் 40 முட்டைகள் வரை இடுகின்றன. இந்த முதலை இனங்கள் இதன் தோலுக்காகவே, அதிகமாக வேட்டையாடப்பட்டு வருகின்றன. இதன் தோல்மூலம் பல்வேறு விதமான தோற்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கே.எஸ்.சுஜன்,
ஹில்பன் சர்வதேச பாடசாலை,
பலாங்கொடை.

## தம்பி, தங்கைகளே!

**'விஜய்' வாசகர்களான தம்பி தங்கைகளே..**

மாணவர் ஆக்கங்கள் 'பகுதிக்கு உங்களிடமிருந்து கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன வரவேற்கப்படுகின்றன. பலர் இப்பகுதிக்கு வேறு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்த விடயங்களையே பார்த்து எழுதி அனுப்புகின்றனர். இவ்வாறு செய்வதால் நீங்கள் சுயமாக சிந்தித்து எழுதும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். நீங்களே சுயமாக சிந்தித்து ஆக்கங்களை எழுதி அனுப்ப முயற்சி செய்யுங்கள். அவ்வாறு நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் தரமானவையாக இருந்தால் தவறுகள் இருப்பினும் திருத்திப் பிரசுரிக்கப்படும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**




மாணவர் ஆக்கங்கள்
'விஜய்'
கொழும்பு -02

## தூபாராம தாது கோபுரம்

இலங்கையில் முதலில் நிர்மாணிக்கப்பட்ட தாது கோபுரம் தூபாராம தாது கோபுரமாகும். இது கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் தேவநம்பிய தீச மன்னனால் உருவாக்கப்பட்டது. இது அநுராதபுர காலத்துக்குரியது. புத்த பெருமானது, வலது தாடையின் சாம்பலை வைத்துக் கட்டப்பட்டுள்ளதென வரலாறுகள் கூறுகின்றன. இது மணி வடிவமைப்பைக் கொண்டுள்ளது.




தற்போது காணப்படும் தாது கோபுரம் 164 1/2 அடி விட்டத்தைக்கொண்ட வட்டமான மேடையின் மத்தியில் நிலத்திலிருந்து 11.4 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இத்தாது கோபுரத்தின் உயரம் 63 அடியும் அதன் விட்டம் 59 அடியும் கொண்டது. இளைஞ்ச திஸ்ஸ அரசனால் விகாரையைச் சுற்றி வட்டதாகே எனப்படும் வட்டமான கூரை வீடு கட்டப்பட்டுள்ளது. இந்த வட்டதாகே அமைப்பு அழிந்து, சுற்றியுள்ள கற்தூண்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. இவை சிறப்பான அலங்கார செதுக்கு வேலைப்பாட்டைக் கொண்டு காணப்படுகின்றது.

எஃப்.நுஹறா அன்சார்,
ரிதீகம

## இலங்கை பற்றிய தகவல்கள்



- இலங்கை வரலாற்றில் முதலாவது மன்னன் என அழைக்கப்படுபவன் - பண்டுகாபயன்
- இலங்கையை ஒரு நாள் ஆட்சி செய்தவன் - விஜயபாகு
- இலங்கையை இறுதியாக ஆண்ட மன்னன் - ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன்
- இலங்கையின் 1 ஆவது நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து உரையாற்றியவர் - 2 ஆம் எலிசபெத் மகாராணி

ஏ.எம்.றக்ஷானா,
தி/கிண்ணியா மு.ம.ம.வித்., கிண்ணியா-03

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விஜய் வாசகர் மடல்



விஜய்யே! ஏராளமான தகவல்கள்; பொருத்தமான படங்கள்; எங்கிருந்து இவற்றைப் பெறுகின்றாய்? உன் பயன் பற்றி விபரிக்க இப்பகுதி போதாது. நீ தாங்கிவரும் அனைத்தும் சுப்பர்.

**-எஸ்.கிறிஷாலினி, சாம்பல்தீவு, திருகோணமலை.**

'யூ எஸ் பி 3.0', 'வளையும் தன்மைகொண்ட கையடக்கத் தொலைபேசி', 'டொல்ஃபினின் அதிசயங்கள்', 'அல்சர்' என்பனவற்றை விரும்பி வாசித்தேன். 'மனித வளர்ச்சிக்கு அடிப்படையான கண்டுபிடிப்புக்கள்' எனும் தலைப்பின்கீழ் வெளியாகிக்கொண்டிருக்கும் அனைத்துத் தகவல்களும் பயன்மிக்கவை. **-எம்.நுஸைப், ஹிங்குல்ஓய, மாவனல்லை.**

**வி**ண்வெளித் தகவல்கள்மூலம் பாடசாலை மாணவர்கள் அதிக பயன்களைப் பெறுகின்றனர். தவிர, உன்னில் பிரசுரமாகின்ற அனைத்து விடயங்களும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு



பேருதவி புரிகின்றன. நீ மேலும் வளர்ச்சி கண்டு, நிலைத்து வாழ வாழ்த்துகின்றேன்.

**-எம்.ரிபாஸ், புப்போகம, கெக்கிராவை.**

**ப**ல்வேறு அறிவுத் தகவல்களை நீ சுமந்து வருகின்றாய். நீ சுமந்து வருவதை என் மூளை சுமக்கின்றது. 'யூ எஸ் பி 3.0' பாவனையின் பயன்பற்றி உன்னால் அறிந்துகொண்டேன். 'இலங்கை கிரிக்கெட் வீரர் மஹேல ஜயவர்தன பத்தாயிரம் ஓட்டங்களை கடந்துவிட்டார்' என்ற செய்தியை விஜய் ஊடாக அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். **-பஸ்னா அன்வர்டீன், வத்தேகம, திக்குவல்லை.**

'**வி**வசாயத்தை வளப்படுத்தும் 'மகாவலி கங்கை', 'பெரிய வேலைகள் செய்யும் சிறிய கறையான்கள்', 'பெரியவரின் தீர்ப்பு', 'பொது அறிவுத் தகவல்கள்', 'மல்லிகைப் பூவின் துயரம்', 'செயற்கைக் குருதி' போன்ற ஆக்கங்கள் உட்பட அனைத்தும் மிகச் சிறப்பானவை.

**- சி.மகேசன், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.**

'**இ**ராமாயணம்' சித்திரத் தொடர் என்னைப் பெரிதும் ஈர்த்துவிட்டது. செய்யுள் வடிவிலும் தொலைக்காட்சி நாடகமாகவும் இதுவரை வாசித்தும் பார்த்தும் வந்த எமக்கு, அதனை சித்திரத் தொடராக பிரசுரித்த பெருமை உன்னையே சாரும். அத்துடன், உன்னில் பிரசுரமாகும் 'வரலாற்றிலிருந்து', 'சிறுகதைகள்' என்பன சுவாரஸ்யமானவை. மீண்டும் தொடர்கதை ஒன்றை எமக்குத் தருவாய் என்ற எதிர்பார்ப்புடன்.....

**- ஸீனதுல் ஸஹாமா, பேராதனை, கண்டி.**

*'கறையான்கள்' பற்றி எம்மைக் கவரும் விதத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. கறையான் புற்றுக்களின் அளவைப் பார்த்து பிரமித்துப் போனேன். 'பொது அறிவுத் தகவல்கள்' பயன்தரக்கூடியவை. 'மையும் காகிதமும்', 'கடலில் மூழ்கிய கப்பலில் பொக்கிஷங்கள்' போன்ற குறுந்தகவல்கள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. 'விளையாட்டுத் தகவல்கள்', 'விண்வெளித் தகவல்கள்' போன்ற பகுதிகளை தொடர்ந்தும் வாசித்து*



*வருகின்றேன். 'அற்புதமான கிருமிநாசினி' உண்மையிலேயே அற்புதம்.*

**- எம்.ரிழ்வான், ஏறாவூர்-04, மட்டக்களப்பு.**


இந்த இதழில் (14.12.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 21.12.2011.



அனுப்ப வேண்டிய முகவரி: வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.



## அடுத்து வரவேண்டியது எது? 1




## சரியான சொல்லில் கோடிடுக 4


1. கட்பாறை / கல்பாறை/ கற்பாறை
2. பணிப்பாலர் / பணிப்பாளர் / பணிபாளர்
3. தலையெழுது / தளையெழுத்து / தலையெழுத்து
4. சான்றிதழ் / சாண்றிதள் / சான்றிதழ்
5. சர்க்கரவர்த்தி / சக்கரவர்த்தி / சக்கரவர்தி

## அறிவுக்கு விருந்து 340 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 03**




**போட்டி: 04**

1. ஆடு - மந்தை
2. பழம் - குலை
3. மக்கள் - கூட்டம்
4. நெல் - குவியல்

**போட்டி: 05**

1. விஞ்ஞானம்
2. தொழில்நுட்பம்
3. வெப்பம்
4. பூஞ்சோலை

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 340 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
அ.நெ.பாத்திமா, பதுறியா வீதி, வாழைச்சேனை-05.

**போட்டி: 02**
எஸ்.எம்.சிர்ஹானா, பூமரத்தடி வீதி, நற்பிட்டிமுனை-02.

**போட்டி: 03**
க.சதுர்ஷன், லோரன்ஸ் வீதி, கொழும்பு-04.

**போட்டி: 04**
மிஷ்பா நஸீர், அடுளுகம, பண்டாரகம.

**போட்டி: 05**
ப.கவிசன், நாவலர் லேன், ஆனைப்பந்தி.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ★ மோ.நிஷாலனி, டிக்கோயா.
- ★ அப்துல் ஹலீம், ஹாலி-எல.
- ★ எம்.அம்ரி, துந்துவை.
- ★ ப.ஜாலினி, புத்தூர்.
- ★ எஃப்.நுஹா, பந்தாவ.
- ★ என்.ராஜனி, பாலையூற்று.
- ★ எஃப்.சுஹைரா, நாவலப்பிட்டி.
- ★ ஸீனத் ஜஹான், உடுதெனிய.
- ★ அன்ரன் றெஜினோல்ட், வவுனியா.
- ★ இஸட். முஹம்மத், கெகுணகொல்ல.






தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்
1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.12.21ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 343
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு



## ஒரே மாதிரியான உருவுடன் இணைக்க 2



## விடை தருக 5

1. குதிரை கனைக்கும் என்பதுபோல;
   கழுதை ..............................
2. யானை பிளிறும் என்பதுபோல;
   தேனீ ..............................
3. நரி ஊளையிடும் என்பதுபோல;
   பசு ..............................
4. காகம் கரையும் என்பதுபோல;
   கோழி ..............................

## இலக்கமிடப்பட்டுள்ள படங்களின் ஆங்கிலப் பெயர்களை உரிய கட்டங்களில் மேலிருந்து கீழாக எழுதி பூர்த்தி செய்க 3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி கீழ்ப்பிரிவு மாணவர்களின் கலை விழாவின்போது, மேடையேறிய சில நடனக் காட்சிகளையும் கல்லூரி அதிபர் உட்பட, முக்கியஸ்தர்களையும் படங்களில் காணலாம்.

# இந்துக் கல்லூரி கலை விழா

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



யாழ்ப்பாணம்-கொழும்புத் துறையைச் சேர்ந்த இராஜசேகரசர்மா- வாகீஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வி வைஹரி, 14.12.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: ச.கேசவக் குருக்கள்)*



மாளிகாவத்தையைச் சேர்ந்த ஜேக்கப்-ராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் கிறிஸ்டி பெர்னான்டோ, 11.12.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் மாதாவின் ஆசி பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



பண்டத்தரிப்பைச் சேர்ந்த தேவானந்தம்-பிறேமினி தம்பதியரின் செல்வப் புதல்வன் பொபின்சன், 11.12.2011 அன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருளால் நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றனர்.



தில்லையடியைச் சேர்ந்த கார்த்திக்-துஷியந்தினி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஷிந்து ஹாசன், 05.12.2011 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் முருகனின் அருளால் பல்கலையும் கற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: சாருண்யா)*



நிந்தவூரைச் சேர்ந்த புவாத்-ரஷியா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மட் சிப்கி, 05.12.2011 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: ஜெம்ஷித்)*

## ஓவியம் வரைவோம் - 80

# இலங்கையில் காணப்படும் வர்ண ஊடகங்கள்

*நாம் கடந்த பாடத்தில் இலங்கையில் காணப்படும் வர்ண ஊடகங்களில் பென்சில் வர்ணம், நீர் வர்ணம், போஸ்டர் வர்ணம் பற்றிப் பார்த்தோம். இந்த வாரம் ஏனைய வர்ண ஊடகங்கள் பற்றி நோக்குவோம்.*





**தூள் வர்ணம்:** தகர டப்பாக்களில் தூளாக அடைக்கப்பட்டிருக்கும், பெரிய அளவிலான ஓவியங்கள் வரைவதற்கு தூள் வர்ணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தூள் வர்ணங்கள் விரைவாகக் கரையக்கூடியவை. அத்துடன், இவை ஒளி புகாத வர்ணங்களாகும்.



**பெஸ்டல், க்ரயோன் வர்ணங்கள்:** சுண்ணாம்பு, மெழுகு என்பன கலந்த ஒருவகை வர்ணக்கட்டிகளாகும். சிறார்கள் ஓவியம் வரைவதற்கு மிகவும் ஏற்ற வர்ண ஊடகங்களாக இவற்றைக் குறிப்பிடலாம்.

**லெக்கர் வர்ணம்:** இந்த வர்ணம் தகர டப்பாக்கள், போத்தல்கள் என்பனவற்றில் அடைக்கப்பட்டிருக்கும். 'ச்சைனிஸ் லெகர்' எனவும் அழைக்கப்படும். இது பளபளப்பான-ஒளி புகாத வர்ணமாகும். இதனை டேர்பன்டைன், தின்னர் போன்ற திரவங்களுடன் கலந்து பயன்படுத்தலாம். பலகை, உலோகம், சுவர் போன்றவற்றில் அலங்காரங்கள் செய்வதற்கு இது ஏற்றது.

**இந்தியன் மை (கறுப்பு மை):** கடும் கறுப்பு மையாகும். இது காய்ந்த பின்னர் நீரில் கரையாது. கறுப்பு-வெள்ளை நிற ஓவியங்களுக்கு மிகவும் ஏற்றது.




**எண்ணெய் வர்ணம்:** கென்வஸ் துணி போன்றவற்றில் வரைவதற்கு மிகவும் ஏற்றது. மினுமினுப்புத் தன்மையுடையது. ஒளி நிழல் காட்டி வரைய மிகவும் ஏற்றது. இதுவும் ஒளி புகாத வர்ணமாகும். டியுப், தகர டப்பாக்களில் அடைக்கப்பட்டிருக்கும். இவற்றுடன் டேர்பன்டைன், வின்சிட் ஒயில் போன்றவற்றைக் கலந்து பயன்படுத்தலாம். பலகை, உலோகம் போன்றவற்றில் வேலைப்பாடுகள் செய்ய இதனைப் பயன்படுத்தலாம்.



த.கபிஸ்கா, இந்து மகளிர் கல்., யாழ்ப்பாணம்.



ஸனீஹா ஷரீப், மதீனா தேசிய பாட..., சியம்பலாகஸ்கொடுவ.




பு.கஜேந்திகா, இலங்கை திருச்சபை த.ம.வித்., வவுனியா.



ஏ. அஸ்கா, அல்-அஸ்ஹர் மு.ம.வித்., ஹெம்மாதகம.



எம்.சந்திரகுமார், அலகொல்ல த.ம.வித்., அலகொல்ல.



எஸ்.ஷதுர்சனா, ஜப்பார் மத்.கல்.,கலகெதர.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீண் பயம்





மகேந்திரபுரி நாட்டை ஆண்ட மன்னனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் ஒரே பிள்ளை என்பதால், இளவரசன்மீது உயிரையே வைத்திருந்தான் மன்னன். காடுகளில் உள்ள விலங்குகளை வேட்டையாடுவதே, இளவரசனுக்கு பிடித்தமான பொழுதுபோக்கு. எனவே, பெரும்பாலான நாட்கள் காட்டிலேயே சுற்றித் திரிவான்.

மன்னனுக்கு கனவுகளில் மிகுந்த நம்பிக்கை உண்டு. தனது கனவில் காண்பவை எல்லாம் நடந்துவிடும் என நம்பிக்கை கொண்டிருந்தான். இதற்கமைய, ஒருநாள் இளவரசனை ஒரு சிங்கம் கொல்வதாகக் கனவு கண்டான். இதனால், இளவரசன் இனி காட்டுக்குப் போகக் கூடாது என்று கட்டளையிட்டான். அவனுக்கு அரண்மனைக்குப் பக்கத்தில் அனைத்து வசதிகளுடனும்கூடிய ஒரு பெரிய மாளிகையைக்கட்டி, அங்கு குடிவைத்தான். அந்த மாளிகையைவிட்டு, இளவரசன் எங்கும் போகாதபடி பலத்த காவலையும் போட்டிருந்தான்.

அந்த அழகிய மாளிகையின் சுவரில் காட்டு மிருகங்களின் படங்கள் இளவரசனின் விருப்புக்கமைய மாட்டப்பட்டிருந்தன. அதில் சிங்கத்தின் படம் ஒன்றும் இருந்தது. ஒருநாள் ஒவ்வொரு படமாகப் பார்த்துக்கொண்டு வந்த இளவரசன், சிங்கத்தின் படம் வந்ததும் அதையே வெகுநேரம் உற்றுப் பார்த்தான். அதைப் பார்க்கப் பார்க்க, அவனுக்கு மிகுந்த கோபமே வந்தது. "அட, கேடுகெட்ட மிருகமே! உன்னால்தானே நான் வெளியில் செல்ல முடியாமல் இப்படி அடைபட்டுக் கிடக்கிறேன்" என்று கூறிக்கொண்டே ஆத்திரத்துடன் படத்தைக் குத்தினான். இதனால், அதில் உள்ள கண்ணாடிகள் சிதறி, வேகமாகப் பாய்ந்து அவன் உடல் முழுவதும் தைத்தன. இதை சிறிதும் எதிர்பாராத இளவரசன் இரத்த வெள்ளத்தில் பிணமாகச் சாய்ந்தான். தேவையற்ற பயம், மிகப்பெரிய ஆபத்தில் கொண்டுபோய் விட்டுவிடும் என்பதை மன்னன் உணராமையினாலேயே, இளவரசனுக்கு இக்கதி ஏற்பட்டது.

# திருந்திய உள்ளம்



செல்லப்பன் சின்னச் சின்னத் திருட்டுகளையே அதிகமாகச் செய்து வந்தான். 'தங்கத்தின் விலை நாளுக்கு நாள் கூடி வருவதைக் கவனித்த அவன், பணத்தைத் திருடுவதை விட்டுவிட்டு நகைகளாத் திருடினால், நிறையப் பணம் சம்பாதிக்கலாமே' என்று நினைத்தான்.

'பணக்கார வீடுகளாக இருந்தால், காவலர்கள் இருப்பார்கள். காவலுக்கு நாய் வளர்க்கும் வீடுகளில் கொள்ளை அடித்தாலும் ஆபத்தே என்று எண்ணினான். அதனால், காவல் இல்லாத வீடாகப் பார்த்துக் கொள்ளை அடிக்க வேண்டும்' என்று முடிவுக்கு வந்தான். அதனால், கதவு பூட்டியிருந்த வீடுகளாகப் பார்த்து நோட்டமிட்டு அத்தகைய வீடுகளில் சமயம் பார்த்துத் திருட ஆரம்பித்தான். இவ்வாறே, ஐந்து வீடுகளில் கொள்ளையடித்து, 20 பவுன் நகைகள் வரை சேர்த்துவிட்டான். ஒரு நாள் அந்த நகைகளை விற்பதற்காக, கடைத்தெருக்கு எடுத்துச் சென்றான்.

அவை திருட்டு நகைகள் என்பது தெரிந்தமையால், அந்த நகைகளை யாரும் வாங்க முன்வரவில்லை. அதனால், குறிப்பிட்ட சில வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கே அவற்றை விற்றுவிட்டு அந்தப் பணத்தை மனைவியிடம் கொடுத்தான். அவனது மனைவியும் பணம் பற்றி என்ன, ஏது என்று கேட்காமல் மிக ஆடம்பரமாக அதனைச் செலவுசெய்ய ஆரம்பித்தாள்.

சிறிது காலத்தில் அவன் கொடுத்த பணம் தீர்ந்துவிடவே, செல்லப்பன் மீண்டும் கொள்ளையடிக்க எண்ணினான். இவ்வாறே, மனைவிக்குத் தெரியாமல் மீண்டும் கொள்ளையடித்து நாற்பது பவுன்கள் வரை நகைகளைச் சேர்த்தான். அதை வைத்து தனது குடிசை வீட்டை மாளிகை வீடாகக் கட்ட ஆசைப்பட்டு, கொள்ளை அடித்த நகைகளைக் கொண்டுசென்று விற்க முனைந்தான். எனினும், குறைந்த விலைக்கே நகை கேட்கப்பட்டதால், நகைகளை விற்காமலேயே வீடு திரும்பினான்.

மறுநாள் நகையைக்கொண்டு செல்லாமல், ஒருவரிடம் அதனை விற்பது குறித்து விசாரித்தான். அவர், அவனது நகைகளுக்கு கணிசமான தொகையைத் தருவதாகச் கூறினார். மகிழ்வுடன் வீடு திரும்பிய அவன், நகைகளை எடுப்பதற்காகச் சென்றபோது, நகைகள் வைத்திருந்த இடத்தில், அவை மாயமாகி இருந்தன. அவனது வீட்டில் யாரோ ஒரு திருடன் நுழைந்து நகைகளை கொள்ளையடித்துச் சென்றுவிட்டதை அறிந்து செல்லப்பன் மனம் குமுறி அழுதான். அவனுக்கு அந்த அளவிற்கு எப்போதும் அழுகை வந்ததில்லை.

இவ்வாறு அவன் அழுதுகொண்டிருக்கும் வேளை, பாடசாலை சென்ற அவன் மகன் பேருந்தில் இருந்து தவறி விழுந்து தலையில் பலத்த அடிபட்டு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறான் என்ற செய்தி கிடைத்தது. பதறியடித்து மருத்துவமனைக்கு ஓடிய அவன், அங்கு தனது மகன் சுயநினைவு இல்லாமல் படுத்திருப்பதைப் பார்த்துக் கண்ணீர் விட்டு அழுதான்.

"செல்லப்பா உன் மகனுக்கு தலையில் பலமாக அடிபட்டிருக்கிறது. இந்த மருத்துவமனையில் சிகிச்சை செய்வதாக இருந்தால், நிறையப் பணம் செலவாகும். உனக்கு வசதி இல்லையென்றால், உன் மகனை அரச மருத்துவமனையில் சேர்த்துவிடு" என்றார் வைத்தியர். 'அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்பட்டுத் திருடிய எனக்கு கடவுள் சரியான தண்டனையைக் கொடுத்துவிட்டார். இனி திருடவே கூடாது' என்று மனதில் நினைத்துக்கொண்டு செய்வதறியாது அழுதான் செல்லப்பன்.

அடுத்தநாள், காலை பாடசாலையின் தலைமை ஆசிரியர் அவனது வீட்டிற்கு வந்தார். "செல்லப்பா நீ வசதி குறைந்தவன் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் உன் மகனுக்கு உதவுவதற்காக, அனைத்து ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பாடசாலையில் ஓர் அறிவிப்புச் செய்தோம். அதன்படி, அவர்கள் அனைவரும் சேர்ந்து கொடுத்ததுதான் இந்தப் பணம். இதை உன் மகனுடைய மருத்துவச் செலவுக்கு வைத்துக்கொள்" என்றார் தலைமை ஆசிரியர். நன்றிப்பெருக்குடன் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டான் செல்லப்பன். அப்போது கடவுளே, ஆசிரியர் உருவத்தில் நேரில் வந்து அவனுக்கு உதவி செய்தது போல் இருந்தது.

# காகத்தின் ஆசை



காலையில் இருந்து சாப்பிடவேமாட்டேன் என்று அழுது அடம்பிடித்தது, சின்னக் காகம். அப்போது, அந்த வழியாக வந்த கரடி, சின்னக்காகம் அழுவதைக் கண்டது. உடனே, அதுபற்றி காகத்தின் அம்மாவிடம் விசாரித்தது,

"அதை நாட்டியப்பள்ளியில் சேர்த்து விடணுமாம். சொன்னாலும் கேட்க மாட்டேங்குது?" என்று வருத்தத்துடன் சொன்னது, தாய்க்காகம்.

"இவ்வளவுதானே, நாட்டியப்பள்ளி ஆசிரியை மயில் அக்கா எனக்கு ரொம்பவும் தெரிந்தவர். நான் இவனைச் சேர்த்துவிடுகின்றேன்" என உறுதியளித்தது, கரடி. சின்னக்காகத்திற்கு ஏகப்பட்ட சந்தோஷம். கரடியுடன் உடனே புறப்பட்டது. போகும்போது, மறக்காமல் கால்களில் சலங்கைகளைக் கட்டிக்கொண்டது.

நாட்டியப்பள்ளியில் அப்போது வகுப்பு நடந்துகொண்டிருந்ததால், மயில் அக்காவிடம் கரடியின் வருகை குறித்து வரவேற்பறையில் நின்ற குருவிகள் தெரியப்படுத்தின.

"அவர்களை உள்ளே வரச்சொல்" என்றது மயில் அக்கா. கரடியும், சின்னக்காகமும் உள்ளே வந்தன. மயில், குயில், அன்னம், வாத்து, மைனா என்று சகல பறவைகளும் உற்சாகமாக நாட்டியம் கற்றுக்கொண்டிருந்தன.

"உங்கள் பள்ளியில் நாட்டியம் கற்றுக்கொள்ள எங்கள் சின்னக்காகம் ஆசைப்படுகிறது. சேர்த்துக்கொள்ள முடியுமா?" என கரடி பவ்யமாகக் கேட்டது.

மயில் அக்கா சின்னக்காகத்தை ஏற, இறங்கப் பார்த்தது. "எங்கள் நடனப்பள்ளியில் சில விதிமுறைகள் இருக்கின்றன. அதற்குக் கட்டுப்பட்டால்தான் சேர்த்துக் கொள்ள முடியும்" என்றது.

'என்னென்ன விதிமுறைகள்" என்று கரடி கேட்டது.

"சொந்தக் குரலில் பாடிக் கொண்டேதான் ஆடவேண்டும். அதனால், முறையாகச் சங்கீதம் கற்று வரவேண்டும்" என்றது மயில் அக்கா.

"அவ்வளவுதானே, ஒரே வாரத்தில் வருகிறோம்" என்று சின்னக்காகத்தை அழைத்துக் கொண்டு கரடி சென்றது.

"கரடி மாமா.... நான் எப்படிப் பாட்டுக் கற்றுக் கொள்ள முடியும்?" என்று பரிதாபமாகக் கேட்டது, சின்னக்காகம்.

"கவலைப்படாதே, மருமகனே.... கழுதை அண்ணா எனது நண்பர். அவரிடம் சங்கீதம் கற்றுக்கொள்ள நான் சேர்த்து விடுகின்றேன்' என்றது, கரடி. உடனே அவை இரண்டும் கழுதையைத் தேடிச் சென்றன.

அவை போனபோது, கழுதை ஆற்று நீரில் நின்று சாதகம் செய்துகொண்டிருந்தது. "அடடே.... கரடி நண்பா, வா.... வா.... என்ன விஷயம்" என்று வரவேற்றது, கழுதை.

"இந்தச் சின்னக்காகம் நாட்டியம் கற்றுக் கொள்ள ஆசைப்பட்டது. அதற்காக, மயில் அக்காவிடம் சென்றோம். அங்கே சங்கீதம் கற்றுக்கொண்டால்தான் நாட்டியம் சொல்லித் தருவார்களாம். அதனால்தான் உங்களிடம் வந்தேன்" என்றது, கரடி.

கழுதை யோசித்தது. "சரிதான்...... சங்கீதம் சொல்லித் தருவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், ஏதாவது இசைக்கருவி வாசிக்கத் தெரிந்தால்தான் சங்கீதம் சுலபமாக வரும். நீ வேண்டுமென்றால் யானை மாஸ்டரிடம் சென்று டிரம்ஸ் வாசிக்கக் கற்றுக் கொண்டு வா" என்று சின்னக்காகத்திற்கு ஆலோசனை சொன்னது கழுதை.

உடனே, அவை இரண்டும் யானை மாஸ்டரைத் தேடிச் சென்றன. அங்கு, யானை நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தது. அதை எழுப்பி, விஷயத்தைச் சொன்னது, கரடி. யானை தூக்கம் கலையாமல், "டிரம்ஸ் வாசிப்பது அத்தனை சுலபம் இல்லை. அதற்கு நிறையப் பலம் வேணும். அந்தப் பலம் இருக்கான்னு முதல்ல டெஸ்ட் பண்ணனும். அதோ, அந்த விறகு கட்டைகளை இந்த சின்னக்காகத்தை விட்டு பிளந்து போடச் சொல்" என்றது.

சின்னக்காகம், கோடரியையும், விறகையும் மாறிமாறிப் பார்த்தது. பின்னர், "எனக்கு நாட்டியத்தில விருப்பம் இல்லை. எனக்கு ஓவியம் வரையத்தான் விருப்பம்" என்றது.

"ஓவியம் தானே...! நம்ம ஒட்டகச்சிவிங்கி அழகாக வரைவார். அவரிடம் சுலபமாக கற்றுக்கொள்ளலாம்" என்று கரடி கூறியதும், சின்னக்காகம் 'ஆளை விட்டால் போதும்பா' என்று பறந்தே போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் மாலாவின் அம்மா, மாமி, கமலா மற்றும் மாலா ஆகியோருக்கிடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்

**කමලා:** ආ.. නැන්දේ, මාලා එන්න... එන්න.
ஆ.... நெந்தே, மாலா என்ன.... என்ன.
கமலா: ஆ.... மாமி, மாலா வாருங்கள்.... வாருங்கள்.

**අම්මා:** අම්මා කෝ දුව?
அம்மா கோ துவ?
(மாலாவின்) அம்மா: அம்மா எங்கே மகள்?

**කමලා:** අම්මා කාමරයේ. එන්න නැන්දේ කාමරයට යමු.
அம்மா காமரயே. என்ன நெந்தே காமரயட்ட யமு.
கமலா: அம்மா அறையில். வாருங்கள் மாமி அறைக்குப் போவோம்.

**අම්මා:** දැන් කොහොමද නංගි?
தென் கொஹொமத நங்கி?
(மாலாவின்) அம்மா: இப்போது எப்படி தங்கச்சி?

**නැන්දා:** ආ... අක්කා, දැන්නම් ටිකක් හොඳයි.
ஆ... அக்கா, தென்னம் டிகக் ஹொந்தய்.
மாமி: ஆ.. அக்கா, இப்போது பரவாயில்லை.

**කමලා:** මේක ආතරයිටිස් එකක්ලු නැන්දේ. බෙහෙත් බිව්වම අඩුවෙයි කියලා ඩොක්ටර් කිව්වා.
மேக ஆதரைடீஸ் எகக்லு நெந்தே. பெஹெத் பிவ்வம அடுவெய் கியலா டொக்டர் கிவ்வா.
கமலா: இது ஆதரைடீஸ் ஒன்றாம் மாமி. மருந்து குடித்தால் குணமாகும் என்று டொக்டர் சொன்னார்.

**අම්මා:** එහෙමනම් වෙලාවට බෙහෙත් බොන්න. ඉක්මණින් සනීප වෙයි.
எஹெமநம் வெலாவட்ட பெஹெத் பொன்ன. இக்மனின் சனீப வெய்.
(மாலாவின்) அம்மா: அப்படியானால் நேரத்திற்கு மருந்து எடுங்கள். விரைவில் குணமாகும்.

**කමලා:** මෙන්න නැන්දේ තේ බොන්න. මාලා තේ ගන්න.
மென்ன நெந்தே தே பென்ன. மாலா தே கன்ன.
கமலா: இந்தாருங்கள் மாமி தேநீர் குடியுங்கள். மாலா தேநீர் எடுங்கள்.

**මාලා:** බොහොම ස්තූතියි කමලා.
பொஹொம ஸ்தூதிய் கமலா.
மாலா: மிக்க நன்றி கமலா.

**අම්මා:** අපි ගිහින් එන්නම් නංගි. දේවි පිහිටයි.
அபி கிஹின் என்னம் நங்கி. தெவி பிஹிடய்.
(மாலாவின்) அம்மா: நாங்கள் போய் வருகிறோம் தங்கச்சி. கடவுள் துணை.

**නැන්දා:** දෙවි පිහිටයි අක්කා. ගිහින් එන්න.
தெவி பிஹிட்டய் அக்கா. கிஹின் என்ன.
மாமி: கடவுள் துணை அக்கா. போய் வாருங்கள்.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. அம்மா எங்கே மகள்?
..........................................................................

ii. மருந்து குடித்தால் குணமாகும்.
..........................................................................

iii. மாமி தேநீர் குடியுங்கள்.
..........................................................................






'If' எனும் இணைக்கும் சொல்லைக் (Joining Word) கையாண்டு ஒன்றிணைக்கப் படுகின்ற கலப்பு வாக்கியங்களை (Complex Sentence) மேலும் இங்கே பயில்வோம்.

(அ) அவர்கள் கடுமையாகப் படித்தால், பரீட்சையில் சித்தியடைவார்கள்.
If they study hard, they will pass the examination.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

- அவர்கள் கடுமையாகப் படித்தால்,
If they study hard,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

- அவர்கள் பரீட்சையில் சித்தியடைவார்கள்.
They will pass the examination.
(பிரதான வாக்கியப் பகுதி -Principal Clause)

(ஆ) எங்களுக்கு வாய்ப்பு ஒன்று கிடைத்தால், நாங்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்வோம்.
If we get a chance, we will visit India.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

- எங்களுக்கு வாய்ப்பு ஒன்று கிடைத்தால்,
If we get a chance,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

- நாங்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்வோம்.
We will visit India.
(பிரதான வாக்கியப் பகுதி -Principal Clause)

(ஈ) ஊழியர்கள் உரிய நேரத்துக்கு வந்தால், நாங்கள் அந்த வேலையை ஆரம்பிக்க முடியும்.
If the workers come on time, we can start the work.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

- ஊழியர்கள் உரிய நேரத்துக்கு வந்தால்,
If the workers come on time,
(துணை வாக்கியப் பகுதி-Subordinate Clause)

- எங்களால் அந்த வேலையை ஆரம்பிக்க முடியும்.
We can start the work.
(பிரதான வாக்கியப் பகுதி -Main Verb)

(உ) ஜெகன் மருந்தை, உட்கொண்டால், விரைவில் சுகம் அடைவான்.
If Jegan takes the medicine, he will get well soon.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

- ஜெகன் மருந்தை உட்கொண்டால்,
If Jegan takes the medicine,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

- அவன் விரைவில் சுகம் அடைவான்.
He will get well soon.
(பிரதான வாக்கியப் பகுதி -Main Clause)

(ஊ) சுஜாதா அனுமதியைப் பெறுவாளாயின், அவளால் கருத்தரங்குக்கு சமூகமளிக்க முடியும்.
If Sujatha gets the permission, she can attend the seminar.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

- சுஜாதா அனுமதியைப் பெறுவாளாயின்,
If Sujatha gets the permission,
(துணை வாக்கியப் பகுதி-Subordinate Clause)

- அவளால் கருத்தரங்குக்கு சமூகமளிக்க முடியும்.
She can attend the seminar.
(பிரதான வாக்கியப் பகுதி -Principal Clause)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்



* 'தமன' என்பது இலங்கையிலுள்ள பறவைகள் சரணாலயமாகும். இலங்கையிலுள்ள விலங்குகள் சரணாலயங்கள் எவை?
  யால, வில்பத்து, உடவல, சோமாவதி, கல்லோயா



* உலகின் மிக நீளமான மலைத்தொடர் தென் அமெரிக்காவில் உள்ள 'அந்தீஸ்' மலைத்தொடர் ஆகும். உலகில் அதிக அளவில் உயர்ந்த மலைகளைக்கொண்ட நாடு எது?
  நேபாளம்

* ஸ,ரி,க,ம,ப,த,நி, என்பது இசையின் ஏழு ஸ்வரங்களாகும். இசையில் உள்ளத்தை மிக ஆழமாகத் தொடும் சோகத்திற்குரிய ராகம் எது?
  முகாரி





* உலகின் எட்டாவது அதிசயமாக, ஐ.நா.வின் யுனேஸ்கோ அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சிகிரியா ஓவியங்களைக் கண்டுபிடித்தவர் யார்?
  A.C.R பெல்
  (1898 ஆம் ஆண்டில்)



* கொழும்பு நகருக்கருகில் ஓடும் நதி களனி கங்கையாகும். 'கோகன்ன' எனப்படும் திருகோணமலை அருகில் கடலில் கலக்கும் ஆறு எது?
  மகாவலி கங்கை



* வளிமண்டலத்தில் காணப்படும் ஆகக் கூடிய வாயு எது?
  நைதரசன்

* உலகில் இன்று பல்வேறு விதமான வாழ்த்து அட்டைகள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இதில் ஆகக் கூடிய வாழ்த்து அட்டைகள் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது?
  கிறிஸ்மஸ் பண்டிகைக்காக



* உலகில் மிக நீளமான நதி 'நைல்' ஆகும். உலகில் மிக நீளமான பாலம் எது? அதன் நீளம் என்ன?
  'ஹைவான்' பாலம் சீனாவில் உள்ள கிங்டவ் நகரத்தையும் ஹொங்டாவ் என்ற தீவையும் இணைக்கும் இது 264 மைல் நீளமான பாலமாகும்

* உலகில் 15 நிமிடங்கள் மட்டும் அரசனாக இருந்தவர் யார்?
  14 ஆம் லூயி மன்னன்

* இலங்கை 1948.02.04 இல் சுதந்திரம் பெற்றது. இலங்கை எப்போது குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டது?
  1972 ஆம் ஆண்டில்

* தென்கொரியாவின் தலைநகரம் சியோல் ஆகும். வடகொரியாவின் தலைநகரம் எது?
  பியோங்யாங்

* இந்தியாவையும் சீனாவையும் பிரிக்கும் எல்லைக் கோடு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
  மக்மோகன் கோடு

தொகுப்பு- உடுவை பரந்தாமன்

# ஹிலரி கிளின்டனின் மியன்மார் விஜயம்



அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செயலாளர் ஹிலரி கிளின்டன் மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு கடந்தவாரம் மியன்மார் சென்றிருந்தார். கடந்த 50 வருடங்களின் பின்னர் அமெரிக்காவின் உயர்மட்டத்தலைவர் ஒருவர் மியன்மாருக்கு மேற்கொண்ட முதலாவது பயணம் இதுவாகும்.

இப்பயணத்தின்போது, அவர் மியன்மார் ஜனாதிபதி தெய்ன் செய்ன்னை சந்தித்ததுடன், இரண்டு நாடுகளுக்கிடையேயான நட்புறவை மேம்படுத்தும் நோக்கில் அரசியல், பொருளாதார விடயங்கள் குறித்தும் பேசியுள்ளார். அத்துடன், அந்த நாட்டின் எதிர்க் கட்சித் தலைவி ஆன் சாங் சூக்கியையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

1962 ஆம் ஆண்டிலிருந்து, மியன்மாரில் இராணுவ ஆட்சி நிலவிவந்த நிலையில் கடந்த வருடம் ஜனநாயக ஆட்சியாளர்களிடம் ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. இதனையடுத்து வெளிநாடுகள் மியன்மாருடன் நட்புறவைப் பேண முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது





அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...




# 'செலக்' புதிய அமைப்பு உதயம்

லத்தின் அமெரிக்க நாடுகள் ஒன்றிணைந்து 'செலக்' எனப்படும் பிராந்திய அமைப்பொன்றை ஏற்படுத்தியுள்ளன. அதில், அமெரிக்கா, கெனடா ஆகிய நாடுகள் சேர்த்துக்கொள்ளப் படாதது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வெனிசுவெலாவில் நடைபெற்ற இதன் ஆரம்ப மாநாட்டின் இறுதியில் நாடுகளின் தலைவர்கள் தமக்கிடையே நெருக்கமான உறவைப் பேணுவதற்கு சங்கட்பம் பூண்டுள்ளனர்.

## அற்லஸ் கேள்வி - 338

**கேள்வி:** மியன்மாரில் எத்தனையாம் ஆண்டிலிருந்து இராணுவ ஆட்சி நிலவி வந்தது?

சரியான விடை.................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 338,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 336 இன் சரியான விடை: 48**

பரிசு பெறுவோர்

எஸ்.லாமி ஆ
லேக் வீதி, மருதமுனை-03

சேம் ஸ்டேன்லி,
பிரதான வீதி, வட்டவல.

கு.துவிஷா,
மஹிந்த பிளேஸ்,கிருலப்பனை,
கொழும்பு-06

# ரஷ்ய தேர்தலில் பிரதமர் புட்டினின் கட்சி வீழ்ச்சி

ரஷ்யாவில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் விலாடிமிர் புட்டினின் கட்சி வெற்றி பெற்றுள்ள போதிலும் நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையை அக்கட்சி பெறவில்லை.

இதன்படி, கொம்யூனிஸ்ட் கட்சி இரண்டாவது நிலையில் உள்ளது. 2007 ஆம் ஆண்டு நடைபெற்றிருந்த தேர்தலில் பிரதமர் புட்டினின் கட்சி 64.3 விகிதாசாரத்தில் அமோக வெற்றி பெற்றிருந்தது. 450 ஆசனங்களில் 350 ஆசனங்களை அக்கட்சி அப்போது பெற்றிருந்தது.



இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இம்முறை ஏற்பட்டுள்ள பின்னடைவு பிரதமர் புட்டினை பெரிதும் பாதிக்கும் என்று விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் ரஷ்யாவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் புட்டினின் வெற்றியை இந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் பாதிப்படையச் செய்யலாம் என்றும் கருதப்படுகின்றது. நாட்டின் மீதும் அவரது கட்சியின்மீது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியே இந்தப் பின்னடைவிற்கு காரணம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.



இதேவேளை, 20 வருடங்களுக்கு முன்னர் மக்களின் அதிருப்தியினால் வீழ்ச்சி நிலைக்கு ஆளாகியிருந்த கொம்யூனிஸ்ட் கட்சிக்கு இம்முறை அதிக அளவில் மக்கள் வாக்களித்துள்ளனர். ரஷ்ய மாணவ சமூகத்தினர், புத்திஜீவிகள், வர்த்தகர்கள் ஆகியோர் அதிகப்படியாக கொம்யூனிஸ்ட் கட்சிக்கே வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவாலை எதிர்கொள்ளும் இலங்கை கிரிக்கெட் அணி



இலங்கை கிரிக்கெட் அணி தென் ஆபிரிக்காவிற்கு கிரிக்கெட் சுற்றுலா சென்றுள்ளது. 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் இரண்டு நாடுகளும் மோதவுள்ளன. இலங்கை அணிக்கு திலகரட்ன டில்ஷான் தலைமை தாங்குகின்றார். முதாவது டெஸ்ட் போட்டி டிசம்பர் 15 ஆம் திகதியும் இரண்டாம் போட்டி 26 ஆம் திகதியும் மூன்றாம் போட்டி ஜனவரி 3 ஆம் திகதியும் நடைபெறும். டெஸ்ட் போட்டிகளைத் தொடர்ந்து ஒருநாள் போட்டிகள் முறையே ஜனவரி 11,14,17,20, 22 ஆம் திகதிகளில் நடைபெறும்.

இலங்கை அணிக்கு தென்னாபிரிக்காவுடனான இப்போட்டி எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததோ அவ்வாறே, இலங்கை அணியின் தலைவர் டில்ஷானின் தலைமைப் பதவியை தக்க வைப்பதற்கான முக்கியத்துவம் மிக்க போட்டியாகவும் இது அமையவுள்ளது. எனினும், தென்னாபிரிக்க அணி வலுவான அணியாக கருதப்படுகின்றமையால் இலங்கை அணி பெரும் சவாலை எதிர்கொள்ளும் என்றே கருதப்படுகின்றது.

# சிம்பாப்வே தலைவருக்கு சிறந்த வீரருக்கான விருது




சிம்பாப்வேயின் நடப்பு வருடத்திற்கான சிறந்த கிரிக்கெட் வீரராக சிம்பாப்வே அணியின் தலைவர் பிரென்டன் டெயிலர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவ்வாறே, சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதையும் அவர் பெற்றுள்ளார்.

சிம்பாப்வேயின் வருடாந்த கிரிக்கெட் விருது வழங்கும் விழாவிலேயே இது தொடர்பான அறிவிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், சிம்பாப்வே அணியை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதிலும் பிரென்டன் பிரதான பங்களிப்பை வழங்கி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கருத்தில் கொண்டே, அவரை வருடத்தின் சிறந்த வீரராக சிம்பாப்வே கிரிக்கெட் சபை தெரிவுசெய்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# டைகர் வுட்ஸ் மீண்டும் சாதித்தார்



கொல்ஃப் புகழ் டைகர் வுட்ஸ் இரண்டு வருடங்களின் பின்னர் மீண்டும் செம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற உலக செம்பியன்ஷிப் கொல்ஃப் போட்டிகளில் கலந்துகொண்டே டைகர் வுட்ஸ் இந்தப் பட்டத்தை மீண்டும் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

ஜெக் ஜோன்சன்-டைகர் வுட்ஸ் இரண்டுபேருக்குமிடையே நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் 18 ஆவது சுற்றில் ஜொன்சனை வீழ்த்தியே வுட்ஸ் வெற்றியடைந்தார். 2009 ஆம் ஆண்டில்தான் டைகர் வுட்ஸ் இறுதியாக மாஸ்டர் கொல்ஃப் போட்டியில் செம்பியன் பட்டத்தை வென்றிருந்தார். அதன் பின்னர் தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக, போட்டிக் களத்திலிருந்து ஒதுங்கியிருந்தார். இருப்பினும் தற்போது மீண்டும் போட்டிக்களம் திரும்பியுள்ளதையடுத்தே, உலக செம்பியன் கிண்ணத்தை மீண்டும் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

# கடைசி விக்கெட்டில் சாதனை படைத்த மேற்கிந்திய வீரர்



துடுப்பாட்ட வரிசையில் பத்தாவது துடுப்பாட்ட வீரராக களம் இறங்குபவர் அதிக ஓட்டங்களை எடுக்கக்கூடிய சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக இருப்பதில்லை. ஆனால், இந்த மரபைத் தகர்த்துள்ளார் மேற்கிந்திய தீவுகள் அணியின் 27 வயதான ரவிரம்பால். இவர் இந்தியாவிற்கு எதிரான ஒருநாள் போட்டியொன்றில் 10 ஆவது துடுப்பாட்ட வீரராக களம் இறங்கி 86 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்துள்ளார். அதிலும் 6 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் என ஓட்டங்களை அதிரடியாக விளாசியுள்ளார்.

இதன்படி ஒருநாள் போட்டி வரலாற்றில் 10 ஆவது விக்கெட் துடுப்பாட்ட வீரரொருவர் அதிக எண்ணிக்கையைப் பெற்று உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார். இதற்கு முன்னர் இந்த சாதனை பாகிஸ்தான் வீரர் மொஹமத் ஆமாரிடம் இருந்தது. 2009 ஆம் ஆண்டில் நியூஸிலாந்து-பாகிஸ்தான் போட்டிகளில் இவர் 73 ஓட்டங்களைப் பெற்றிருந்தமையே இதுநாள் வரை சாதனையாக இருந்து வந்தது. அந்த சாதனையை ரவிரம்பால் தமது துடுப்பாட்டத்தினால் முறியடித்துள்ளார்.

மேலும், ரவிரம்பாலின் இந்த விலாசல் துடுப்பாட்டத்தின்போது, எதிர்முனையில் அவருக்கு தோள்கொடுத்து துடுப்பெடுத்தாடியவர் கெமர்ரோச் ஆகும். இரண்டு பேரும் 10 ஆவது விக்கெட் இணைப்பாட்டத்தில் 99 ஓட்டங்களைப் பெற்றமையும் சாதனையாகவே கருதப்படுகின்றது. அதாவது, ஒருநாள் போட்டியில் கடைசி விக்கெட் இணைப்பாட்டத்தில் 3 ஆவதாக பெற்ற அதிகப்படியான ஓட்டங்கள் என்ற பெருமையும் இதில் சேர்கின்றது.


## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | - ரூபா 390/= | 6 மாதத்திற்கு | - ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | - ரூபா 780/= | 1 வருடத்திற்கு | - ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..........................................

முகவரி - ..........................................

தொ.பேசி - ..........................................

பத்திரிகையின் பெயர் - ..............................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)

..........................................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:
**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**


# காயத்தினால் நழுவிய ஸ்ரீசாந்தின் வாய்ப்பு



இந்தியா- அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் டிசம்பர் 26 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தப் போட்டிகளில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரீசாந்த் இடம்பெறுவதற்கிருந்த வாய்ப்பு நழுவியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

காயம் காரணமாகவே, ஸ்ரீசாந்த் இந்த வாய்ப்பை இழந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. முன்னதாக இந்த வாய்ப்பு பிரவின் குமாருக்கே வழங்கப்படுவதாக இருந்தது. எனினும், அவருக்கு காயம் ஏற்பட்டமையினாலேயே, அவரது இடத்திற்கு இன்னொருவரை நியமிக்க வேண்டிய நிலை தெரிவுக் குழுவிற்கு ஏற்பட்டது.


அதன்படி இர்பான் பதான் 'ஸ்ரீசாந்த்' அபிமன் மிதுன் ஆகியோரில் ஒருவருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படக்கூடிய சாத்தியம் இருந்தது. இந்த நிலையிலேயே, ஸ்ரீசாந்தும் காயத்திற்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றமையால் அவரும் அந்த வாய்ப்பை இழந்துள்ளார். எனவே, இந்த வாய்ப்பு தற்போது மிதுனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவுஸ்திரேலியாவுடனான மேற்படி போட்டிகள் ஜனவரி 28 ஆம் திகதி முடிவடைகின்றது. இதனைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் இந்தியா, இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டித் தொடர் ஆரம்பமாகின்றது. இப்போட்டியில் தனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று ஸ்ரீசாந்த் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழனின் உபகோளில் நீர் கண்டுபிடிப்பு

வியாழன் கோளின் 'யுரோப்பா' (Europa) என்ற உபகோளின் மேற்பரப்பிற்குக் கீழாக, ஆழமில்லாத ஏரிகள் இருப்பதற்கான சான்றுகளை அறிவியலாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். யுரோப்பாவின் மேற்பரப்பிலிருந்து 3 கிலோமீற்றர் ஆழத்திலேயே இந்த ஏரிகள் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தின் விண்வெளி இயற்பியல் நிறுவனத் தலைவரான பிரிட்னி ஸ்மித்தின் தலைமையில் கலிலியோ விண்கலம் அனுப்பிய தகவல்களை ஆதாரமாகக்கொண்டே, இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

வியாழன் கிரகம் குறித்து ஆய்வு நடத்த அமெரிக்காவின் நாஸா விண்வெளி நிலையம் கடந்த 1989 ஆம் ஆண்டில் கலிலியோ விண்வெளி ஓடத்தை அனுப்பியது. அந்த ஓடம் வியாழன் கிரகத்தின் மேற்பரப்பை ஆய்வு செய்தது. அதன்போது, அங்கு பனிக்கட்டிப் படிவங்கள் ஓரளவுக்கு இருப்பது தெரியவந்தது. எனினும், அவை மிகத் தெளிவாகத் தெரியாததால், அங்கு நீர் இருப்பது குறித்து சந்தேகம் நிலவியது.

இந்த நிலையிலேயே, வியாழனைச் சுற்றி வரும் யூரோப்பா என்ற உபகோளில் நீர் இருப்பது தற்போது உறுதியாகத் தெரியவந்துள்ளது. கலிலியோ விண்வெளி ஓடம் அனுப்பிய தகவல்களைத் தொடர்ச்சியாக ஆராய்ந்து வந்ததை அடுத்தே இது உறுதிசெய்யப்பட்டுள்ளது. யூரோப்பாவில் 10 கிலோமீற்றர் அளவுக்கு கனமான பனிக்கட்டிப் படிவங்கள் உள்ளன என்றும் அவை 3 கிலோமீற்றர் ஆழத்துக்குப் படிந்துள்ளன என்றும் இந்த பனிக்கட்டி படிவங்களுக்கு கீழாக பெரிய கடல்களும் ஏரிகளும் இருக்க வாய்ப்புள்ளது என்றும் அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'யுரோப்பா' உபகோள் தொடர்பான விண்வெளித் திட்டங்களை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்க அமெரிக்காவும் ஐரோப்பாவும் திட்டமிட்டு வருகின்றன.






# செவ்வாயில் மணல் குன்றுகள்



அமெரிக்காவின் நாஸா நிறுவனமானது, செவ்வாய்க் கிரகத்திற்கு விண்ணூர்திகளை அனுப்பி ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. அத்தகைய விண்ணூர்த்திகளில் ஒன்றுதான் 'MRO' எனும் 'Mars Reconnaissance Orbiter'. இந்த விண்ணூர்தி எடுத்து அனுப்பியுள்ள புகைப்படங்களை ஆராய்ந்ததில், செவ்வாய்க் கிரகத்தில் மணல் குன்றுகள் மற்றும் அடுக்கடுக்கான மணல் அலைகள் இருப்பது தெரியவந்துள்ளது.

இது குறித்து அமெரிக்காவின் ஜோன்ஸ் கேப்கின்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானி நதன் பிரிட்ஜஸ் கூறுகையில்; "செவ்வாய்க் கிரகத்தில் பலத்த புயல்காற்று வீசுகிறது. இந்த புயல்காற்றினால் அடித்துச் செல்லப்படும் மணலானது, செவ்வாயின் மேற்பரப்பெங்கும் பரவிக் குன்றுகளாக உருவாகியுள்ளன. மேலும், புயலால் அடித்துச் செல்லப்படும் மணலானது, அலைகள்போல் பரவி, ஆங்காங்கே அடுக்கடுக்காகத் தெரிகின்றது" என்றார்.

செவ்வாயில் மணல் குன்றுகள் இருப்பதை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பே விஞ்ஞானிகள் கண்டறிந்திருந்தனர். அந்த மணல் குன்றுகள் செவ்வாயில் தானாகவே உருவானவை என அப்போது அவர்கள் கூறிவந்தனர். எனினும், தற்போதுதான் அவை புயல்காற்றினால் ஏற்பட்டவை எனக் கண்டுபிடித்துள்ளனர்.







# சந்திரனில் அதிகளவில் டைட்டேனியம் தாதுக்கள்

நாஸாவின் சக்திவாய்ந்த கெமராக்களைக்கொண்ட விண்கலம் அனுப்பிய ஏழு விதமான புகைப் படங்களை அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வு செய்திருந்தனர். அதனை அடிப்படையாக வைத்து ஏற்கனவே 1972 ஆம் ஆண்டு அப்பலோ-17 விண்கலம் மூலம் சந்திரனுக்குச் சென்ற விண்வெளி வீரர்கள் அங்கிருந்து வெட்டி எடுத்து வந்த பாறைகளில் பரிசோதனைகளை மேற்கொண்டனர். அதன்போது, குறித்த பாறைத் துண்டுகளில் 'டைட்டேனியம்' உலோக தாதுக்கள் இருப்பது தெரியவந்தது. டைட்டேனியம் என்பது உருக்கு உலோகத்தை விட மிகவும் உறுதியானது.

இந்த உலோகம் பூமியில் ஒரு சதவீதம்தான் உள்ளது. அதாவது, மிகவும் குறைவான அளவிலேயே உள்ளது. எனினும், சந்திரனில் அது பெருமளவில் உள்ளது என்று கூறப்படுகின்றது. அதாவது, அங்குள்ள பாறைகளில் பூமியில் உள்ளதைவிட 10 மடங்கு அதிகமாக டைட்டேனியம் அடங்கியுள்ளது. இத்தகவலை அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழக விஞ்ஞானி மார்க் ரொபின்சன் தெரிவித்துள்ளார். பிரான்ஸில் உள்ள நான்டெஸ் நகரில் நடந்த மாநாட்டில் தமது ஆய்வறிக்கையை சமர்ப்பித்தபோதே, அவர் இத்தகவலைத் தெரிவித்திருந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலந்தியும் பூட்டும்



சிலந்தி ஒன்று ஒரு வீட்டில் கூடு கட்டியிருந்தது. அடிக்கடி இடம் மாற வேண்டிய கட்டாயம் அதற்கு ஏற்பட்டது. அதனால், வீட்டில் நிலையாக இருக்க ஓர் இடம் தேடியது. அனைத்து அறைகளுக்கும் போய்ப் பார்த்தது. எந்த இடமும் அதற்குப் பிடித்தமானதாக அமையவில்லை. ஆனால், அறைக் கதவில் இருந்த பூட்டைப் பார்த்ததும் அதற்கு ஓர் எண்ணம் தோன்றியது.

"பூட்டுத் துளையுள் தங்கினால் அச்சமின்றி இருக்கலாம். காற்றுத் தொல்லைகூட இருக்காது. யாராலும் பிடிக்க முடியாது. கதவருகில் வலை பின்னலாம். சிலந்தி, தன் வலையில் சிக்கப் போகும் பூச்சிகள், கொசுக்கள் முதலியவற்றைக் கற்பனையில் கண்டது. அப்போது, யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. சிலந்தி யோசியாமல் பூட்டினுள் நுழைந்துவிட்டது. சாவி ஒன்று பூட்டினுள் நுழைந்தது. அது சிலந்தியையும் அதன் திட்டங்களையும் ஒரேயடியாக நசுக்கிவிட்டது. தோற்றத்தை மட்டும் கண்டு எதையும் முடிவுசெய்யக்கூடாது அல்லவா!



# சாதனையாளர்: அரசியல்

## ஒட்டோ-வொன் பிஸ்மார்க்



(1815-1898)

முதலாம் இரண்டாம் உலக யுத்தத்திற்கு மிக முக்கிய காரணமாக இருந்த நாடு ஐரோப்பிய வல்லரசாகிய ஜேர்மனி ஆகும். ஆனால், முதலாம் உலக யுத்தத்திற்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பிய வரைபடத்தில் ஜேர்மனி என ஒரு நாடே இருக்கவில்லை. தமது அயராத முயற்சியால் ஜேர்மன் மொழிபேசும் நாடுகள் அனைத்தையும் ஒன்றிணைத்து, ஜேர்மனி எனும் ஒரு நாட்டை உருவாக்கி அதனை ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றாக உருவாக்கியவர்தான் ஒட்டோ-வொன் பிஸ்மார்க் ஆவார்.

1815 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரலாற்றில் இணையில்லாத புகழீட்டிய ஒட்டோ-வொன் பிஸ்மார்க், அவர்கள் ஜுங்கர்ஸ் (Junkers) எனப்படும் நாட்டுப்புற மேன் மக்கள் வம்சத்தில் பிறந்தார். உறுதி, துணிவு, திறமை, உரிமைக்காகப் போராடும் குணம் என பல்வேறு சிறப்புக் குணாம்சங்களைப் பொதுவாகவே கொண்ட ஜுங்கர்கள் எவருக்கும் அடிபணிய மாட்டார்கள். இவை அனைத்தும் சற்றேனும் குறையாத பிஸ்மார்க் இளமையிலேயே பிரஷ்யாவின் தலைமையில் என்றாவது ஒருநாள் ஜேர்மனி ஐக்கியப்படும் என கனவு கண்டார். அதனை தானே முன்நின்று உழைத்து சாதனைபுரிய வேண்டுமென்றும் அவாக் கொண்டிருந்தார்.

1847 இல் பிஸ்மார்க் பிரஷ்ய நாட்டின் அரசியல் உலகிலும் பிரவேசித்தார். தத்துவஞானம், வரலாறு. இலக்கிய நூல்கள் என்பனவும் பல நாடுகளுக்கு அவர் மேற்கொண்ட பயணங்களும் அவருக்கு விசாலமான அனுபவத்தைக் கொடுத்தன. 1847 இல் தாராண்மை வாதத்துக்கு ஆதரவு கொடுக்கும் நோக்குடன் அரசன் கூட்டிய ஐக்கிய பிரஷ்ய பாராளுமன்றத்தில் பிஸ்மார்க் அங்கத்துவம் பெற்று, உலக வரலாற்றில் கால் பதித்தார்.

1847-1851 க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரஷ்ய புரட்சி, அரசியல் நெருக்கடி. பேரரசின் நிராகரிப்பு என பல பிரச்சினைகளை எதிர்நோக்கினாலும் பிஸ்மார்க்கின் மனப்போக்கும் நாவன்மையும் எதற்கும் அஞ்சாத நெஞ்சத்திடனும் பிரஷ்யாவை மீண்டும் உன்னத நிலைக்குக் கொண்டு வந்தது.

ஜேர்மனி ஐக்கியமடைவதாயின், அது பிரஷ்யாவின் தலைமையிலேயே நடைபெறவேண்டுமென முடிவெடுத்து பிரஷ்யாவை அரசியல், சமூக மற்றும் பொருளாதார துறையில் வியக்கத்தக்க வகையில் முன்னேற்றினார். பிஸ்மார்க்கின் ராஜதந்திரம், சாணக்கியம், மதிநுட்பம், யுக்தி ஆகியவற்றால் 1871 இல் ஜேர்மனி ஐக்கியம் அடைந்தது. அதன்பின் ஜேர்மனியை உன்னத நிலைக்கு கொண்டுசென்ற பிஸ்மார்க் 1898 ஜூலை 30 ஆம் திகதி மறைந்தார்.

ஆர்.ஜே

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 4406

ச.கஜனிகா, ஈஸ்வரிபுரம், வவுனியா.



அங்.இல: 4407

சி.ரிஷான், செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று.



அங்.இல: 4408

எம்.என்.நபீஸ், வட்டரப்பொல வீதி, கல்கிசை.



அங்.இல: 4409

ஐ.எம்.சம்லன், ரக்ஸ்பான, மல்வானை.



அங்.இல: 4410

எச்.எம்.சாபிர், ஹாலி-எல, பதுளை.



அங்.இல: 4411

எம்.என்.ஸகி அஹமட், ஒலம்பாவ வீதி, கெக்கிராவ.



அங்.இல: 4412

த.டிலன், கோயில் வீதி, கல்முனை-03.



அங்.இல: 4413

ம.விந்துஷன், கனகாம்பிகைக்குளம்,



அங்.இல: 4414

ஆர்.எம்.இஸாம், கே.கே.பி.வீதி, கல்முனை-03.



அங்.இல: 4415

ஆர்.கோமேஸ்வரி, முருத்தனை தோட்டம், ஹட்டன்.


படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:.................................
முகவரி:.................................
.................................
பாடசாலை:.................................
வகுப்பு:.................................
திகதி: .................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு


# அதிசய வேட்டை

ஆபிரிக்காவில் மக்கள் நடமாட்டம் இல்லாத அடர்ந்த மத்திய காடுகளில் இன்றும் ஒரு பிரிவினர் பழங்குடியினரின் வாழ்க்கை நிலையில் இருந்து மாறாமல் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். பிக்மி (Pygmy ) என அழைக்கப்படும் இப்பழங்குடிப் பிரிவினர் ஒரு மீற்றர் உயரம்வரை மட்டுமே இருக்கின்றனர். சுமார் 100 பேர் கொண்ட குழுவினராக வாழும் இவர்கள் நிலையாக ஒரே இடத்தில் வாழ்வதில்லை.





எங்கெல்லாம் உணவு கிடைக்கின்றதோ, அங்கு சென்று தங்கள் குடியிருப்பை அமைத்துக்கொள்கின்றனர். தற்போது நாகரிகத்தில் சற்று வளர்ந்துள்ள இந்த பிக்மி இனத்தவரின் வாழ்வாதாரமாக, தேன் எடுப்பதும் வேட்டையாடுவதும் காணப்படுகிறது.

இந்த பழங்குடி இனத்தவர்கள் 'வைண்ட் பைப்' என்ற ஒருவகையான ஆயுதத்தை தம்வசம் வைத்துள்ளனர். இவர்கள் வாழும் அடர்ந்த காடுகளில் உள்ள ஒருவகை நச்சுத் தவளைகளின் உடலில் இருந்து கொடிய விஷத்தை எடுத்து, அதனை சிறிய ஊசி போன்ற மரக் குச்சிகளில் தடவுகின்றனர். அதனை மூங்கில் குழாயில் பொருத்தி வாயில் வைத்து இலக்கை நோக்கி ஊதுகின்றனர். இதன்போது விஷம் தடவப்பட்ட மரக்குச்சி விலங்குகளின் உடலில் பாய அந்த இடத்திலேயே அவை மரணிக்கின்றன. இவ்வாறே, இவர்கள் விலங்குகளை மிக இலகுவாக வேட்டையாடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது உடலிலேயே உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி

Laptop மற்றும் கைத் தொலைபேசிகளுக்குத் தேவைப்படும் மின்சக்தியை நாமே நமது உடலில் இருந்து உற்பத்தி செய்யலாம் என கெனடாவிலுள்ள சிமொன் ப்ரசர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நெக்ஸ் டொனேலென் என்பவரும் அவரது குழுவினரும் கண்டறிந்துள்ளனர்.

முழங்கால்களில் இரண்டு குறடு (Brece) போன்ற 1. 6 கிலோ எடை கொண்ட கருவிகளைப் பொருத்துவதன்மூலம் நாம் நடக்கும்போது, உந்தப்படும் விசையினால் மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் 7 வோட்ஸ் மின்சக்தி எமது முதுகுப்புறத்தில் தொங்க விடப்படும் ஒருவித பை போன்ற கருவிக்குள் சேமிக்கப்படுகின்றது. இதன் எடை ஏறக்குறைய 38 கிலோவாக இருக்கும். எனினும், இந்த எடையைக் குறைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கால்களில் குறடுகள் பொருத்தப்பட்டுள்ளன என்ற உணர்வை இல்லாமல் செய்வது பற்றியும் ஆராயப்படவுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.





# எறும்புகளைக் காப்பாற்றும் தாவரங்கள்

'எறும்புகளை தாவரங்கள் காப்பாற்றுகின்றன என்றால் ஆச்சரியமாக இருக்கின்றதா? ஆம்! கோல் பைட்ஸ் (Gall bites) என்ற ஒரு தாவரமே இவ்வாறு எறும்புகளைக் காப்பாற்றுகின்றது. இந்த தாவரத்தின் நான்கைந்து இலைகளை ஒன்றாக இணைத்து பந்துபோல் மாற்றி, அதற்குள் கூட்டம் கூட்டமாக எறும்புகள் வசிக்கின்றன. அவ்வாறு வசிக்கும் எறும்புகளுக்கு தங்க இடமும் கொடுத்து, உணவும் அளித்து, எறும்புகளைக் காப்பாற்றவும் செய்கின்றன இந்த கோல் பைட்ஸ் தாவரங்கள்.

அதேபோன்று, எறும்புகளும் இந்த தாவரத்திற்கு பாதுகாப்பைக் கொடுக்கின்றன. எவ்வாறெனில், இந்த தாவரத்தின் இலைகளை அரித்து நாசம் செய்யும் பூச்சிகளின் முட்டைகளையும் அவற்றில் இருந்து வெளிவரும் புழுக்களையும் கொன்று தமக்கு உணவாக்கிக்கொள்கின்றன. இவ்வாறே, எறும்புகள் தங்களுக்கு உணவளித்து, தங்க அனுமதித்து பாதுகாப்புத் தரும் தாவரங்களை தமது சொந்த வீடு போன்று பாதுகாக்கின்றன.





# கடலுக்குள் தபால் நிலையம்

பசுபிக் பெருங்கடலின் ஹைட்வே எனும் தீவின் கடலுக்குள் வனுவட்டு (Vanuatu) என்ற பெயரில் தபால் நிலையம் ஒன்று செயற்பட்டு வருகின்றது. 2003 ஆம் ஆண்டே செயற்பாட்டுக்கு வந்த இந்த தபால் நிலையம், கரையில் இருந்து 50 மீற்றர் தூரமும் கடலின் 3 மீற்றர் ஆழமான பகுதியிலும் அமைந்துள்ளது.




இந்தத் தபால் நிலையத்தில் ஊழியர்கள் பணிபுரியும்போது, கடலின் வெளிப்புறத்தே தெரியும்வண்ணம் ஒரு கொடி ஏற்றப்படும். ஊழியர்கள் பணியில் இல்லாவிடின், கடலுக்கு அடியில் உள்ள தபால் நிலையத்தின் அருகே இணைக்கப்பட்டிருக்கும் தபால் பெட்டியில் தபால் அட்டைகளைப் போட்டுவிடலாம். மேலும், இங்கு தபால் அட்டைகளை முத்திரையிடுவதற்குப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட கருவிகளையும் 4 வகை Water Proof தபால் அட்டைகளையும் பயன்படுத்துகிறார்கள். இதுவரையில் ஒரு லட்சம் பேர் இந்த தபால் நிலையத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

கடலின்கீழ் அமைக்கப்பட்டுள்ள முதலாவது தபால் நிலையம் பஹாமாஸ் நாட்டைச் சேர்ந்த கடலடிப் புகைப்படக் கலைஞரான ஜோன் ஏர்னெஸ்ட் வில்லியம்சன் என்பவரால் 1939 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது.





# தரையில் வசிக்கும் மீன்



நுரையீரல் மீன் (Lungfish) என அழைக்கப்படும் மீன் வகையானது, நன்னீரில் வசிக்கும் மீன் இனமாகும். இந்த மீன் இனமானது, தென் அமெரிக்க பகுதிகளில் அதிகமாக வாழ்கின்றது. 4.10 அடி நீளம் வரையில் வளரக்கூடிய இதன் சிறப்பம்சம் என்னவெனில், இவை நீரில் மட்டுமன்றி; நிலத்திலும் வாழக்கூடிய அபூர்வ ஆற்றல் பெற்றுள்ளவையாகும்.

நீரில் வசிக்கும்போது, சாதாரண மீன்களைப்போன்று சுவாசிப்பதுடன், நிலத்திலும் அவ்வாறே சுவாசிக்கின்றன. வெயில் காலங்களில் நீர் வற்றும் நிலை ஏற்படின், அப்பகுதிகளில் உள்ள சேற்றில் சுமார் 5 முதல் 35 செ.மீற்றர் வரை வளைதோண்டி அதன் மேற்பகுதியில் சில துளைகளை இட்டு, அந்தத் துளைகளூடாக வளையிலிருந்தவாறே சுவாசிக்கும். மழைக்காலம் ஆரம்பித்தவுடன், வளையிலிருந்து வெளியேறி நீரில் வசிக்கும். இவ்வகை மீன்கள் நான்கு ஆண்டுகள் மட்டுமே உயிர்வாழக் கூடியன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி ஐயங்கள்

★ சில இணையத்தளங்களை 'ஓப்பன்' செய்யும் போது, 'சில்வர் லைட்' (Silver Light) எனப்படும் மென் பொருள் (Software) தேவை என்ற 'மெசேஜ்' திரையில் தோன்றுவதுண்டு அந்த மென்பொருள் என்ன?

கூடிய-விசேட அம்சங்களைக்கொண்ட இணையத் தளங்களை 'ஓப்பன்' செய்வதற்காக, 'வின்டோஸ்' கட்டமைப்பில் 'இன்ஸ்டோல்' செய்யப்பட்டிருக்க வேண்டிய 'மைக்ரோசொஃப்ட்' நிறுவனத்தின் மென்பொருளே இந்த 'சில்வர் லைன்' எனப்படுவதாகும். வின்டோஸுடன் பயன்படுத்தப்படுகின்ற 'வெப் பிரவுஸர் பிளகிங், ஆக இதனை இலவசமாக 'டவுன்லோட்' செய்து 'இன்ஸ்டோல்' செய்து கொள்ளமுடியும். இது லினக்ஸ் புரோகிராமிங்குக்காக உருவாக்கப்பட்டுள்ள 'மூன்லைட்' (Moon Light) மென்பொருளை ஒத்ததாகும்.





★ ஹாட் டிஸ்க் (Hard Disck) ஒன்றை அடிக்கடி பாட்டிஷன் அல்லது 'ஃபோமெட்' செய்வதால் அதற்கு ஏதும் பாதிப்புக்கள் ஏற்படுமா?

ஆம். அவ்வாறு அடிக்கடி 'ஃபோமெட்' செய்வதால் ஹாட் டிஸ்க்கின் 'Surface area' வின் ஆயுட் காலம் குறைவடையும். அதனால், டிஸ்க்கில் தரவுகளை சேமிக்க முடியாத பகுதிகள் (Bad Sectors) ஏற்படலாம்.



★ இணையத்தளத்திலுள்ள ஏதேனும் ஒரு பக்கத்தை Print போடும்போது, அதன் பின்னணியிலுள்ள வர்ணம், காட்சிகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகவே பிரின்ட் வருவதுண்டு. இருப்பினும், குறித்த பின்னணி அம்சங்கள் இல்லாமல் எவ்வாறு பிரின்ட் போடுவது?

இதற்கென செய்யவேண்டிய 'செட்டிங்' முறைகள் ஒவ்வொரு 'வெப்' பிரவுஸர்களுக்கிடையேயும் வித்தியாசமானதாகும். இதில் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் வெப்பிரவுஸரில் என்றால் Tools-Options இணை Open செய்யுங்கள். அதிலுள்ள Advance ஐ தெரிவு செய்யுங்கள். அங்கு Printing கீழுள்ள Print Background Colours and Images மீது மௌஸை கிளிக் செய்து அதன் எதிரே உள்ள அடையாளத்தை நீக்குதல் வேண்டும்.





★ கணினியில் இன்ஸ்டோல் செய்துள்ள 'வின்டோஸ் செவன்' புரோகிராம் 32 bit அல்லது 64 bit என்பதை எவ்வாறு தெரிந்துகொள்வது?

இதற்கு முதலாவதாக Start Menu ஊடாக Control Panel க்குள் நுழையுங்கள். இதில் System and Maintenance எனும் System மீது டபிள் கிளிக் செய்யுங்கள். அப்போது திரையில் குறித்த வின்டோஸ் ரகம் எது என்பது தோன்றும்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 14, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org